உ

# அருள் ஒளி



134

மாவைக்கந்தன் திருவடி போற்றி

வெளியீடு :

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்


தெல்லிப்பழை, இலங்கை

2018

## நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை
## 24-06-2018 அன்று திறந்து வைக்கப்பட்டது.







உ

# அருள் ஒளி

( மாதாந்த சஞ்சிகை )



ஆசிரியர்
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்
திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்
ஆடி மாத மலர்
2018

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.
e-mail : thurkaiammantemple@gmail.com
face book : tellidurga@gmail.com

பதிவு இல.: ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019-3

## யாழ் குடாநாட்டில் நிம்மதியின்றி மக்கள்

இரக்கமும் கருணையும் இல்லாத ஓர் சமூகம் எம் மத்தியில் வளர்ந்து கொண்டிருக்கிறது. நள்ளிரவில் வீடுகளுக்குள் புகுந்து ஆயுதங்களினால் தொந்தரவு செய்து அப்பாவிகளின் நகைகளைத் திருடுகின்ற துன்பம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இரவில் என்ன நடக்குமோ ஏது விளையுமோ என்ற ஏக்கத்தோடு பலர் நித்திரையைச் சந்திக்கிறார்கள். இது பற்றி பலரும் எடுத்துரைத்தும் எப்பயனும் கிட்டவில்லை. கௌரவ மாவட்ட நீதிபதி முதல் ஊடகங்கள் வரை அறைகூவல் விட்டபோதிலும் இப்பிரச்சினை அடங்குவதாக இல்லை. ஆன்மீகச் சிந்தனைகள் அருகி வருவதனால் இளைய தலைமுறையினர் இடத்தே இரக்கமற்ற செயற்பாடுகள் என்றுமில்லாதவாறு அதிகரித்து வருகிறது.

கல்வித்துறையில் எம் சமூகம் முன்பு போல் அக்கறை செலுத்துவது இல்லை. இலங்கையில் மிகவும் பின்தங்கிய கல்வி மாவட்டங்களில் ஒன்றாக யாழ். மாவட்டம் அறிவிக்கப்பட்டுவிட்டது. கல்விப்பொது தராதர உயர்தரப் பரீட்சையை இரண்டாவது மூன்றாவது தடவை எம்மவர்கள் முயற்சி செய்யும் பழக்கம் முற்றாக அருகி வருகிறது. யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் கடந்த 3 ஆண்டு காலமாக விஞ்ஞான பீடத்தில் கற்கும் மாணவர்கள் தென் இலங்கை மாணவர்கள் அதிகமாகிக் கொண் டுள்ளார்கள். யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்திலும், பொறியியல்

பீடத்திலும் பெரும்பான்மை இடத்தைச் சார்ந்தவர்களே அதிகமாகக் கற்கிறார்கள். எமது பிரதேசத்திலும் உருவாக்கப்பட்ட எமது பல்கலைக்கழகத்தில் கற்பதற்கு எமது மாணவர்களின் அக்கறை போதாமல் உள்ளது. இந்நிலை மிகவும் ஆபத்தானது.

வருமானம் ஏதும் இல்லாது நவநாகரிகமாக வாழ்வதற்கு இளைய சமூகம் மிகவும் ஆர்வமாக உள்ளது. இதனாலேயே வழிப்பறி, கொள்ளை, கொடூர ஆயுத கலாசாரம் சமீபத்தில் அதிகரித்து வருகிறது. இந்நிலை தொடரக்கூடாது. சகலதுறை சார்ந்த பெரியவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு இப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். எங்கள் சமுதாயத்தைக் காப்பதற்கு யார்தான் முன்வரப்போகிறார்கள். கடவுளையே நோக்கி அனைவரும் மன்றாடுவோம். எங்களுக்கு அவலச்சூழலில் இருந்து ஆறுதல் வேண்டும்.

– ஆசிரியர்



**முன்னேஸ்வரம் முன்னைநாதர் ஆலயத்தில்**
**24-06-2018 அன்று புதிய இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெற்றது.**

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்

ஈழத்திருநாட்டில் நாற்றிசையும் பழைமையும் மகிமையும் வாய்ந்த பாவம் வினை அறுக்கவல்ல திருப்பதிகள் சூழ் நீராடு துறைகள் – தீர்த்தங்கள் பல உள.

வடக்கே கீரிமலையும் – நகுலேசர் ஆலயமும், கிழக்கே கன்னியா நீருற்றும் – கோணேசர் ஆலயமும், தென்வரையில் மாணிக்க கங்கையும் – கதிரை வெற்பும், மேற்பரப்பில் பாலாவியும் – திருக்கேதீச்சரநாதர் கோவிலும். மாயவனாறும், முன்னைநாதர் கோவிலும் இயற்கையாகவே ஈழத்தை அரண் செய்கின்றன. இவை ஐந்தும் காலத்தால் முற்பட்டவையாகவும், ஈழத்தின் வரலாற்றுக்கு முன்பே இடங்கொண்டனவாகவும் இருக்கின்றனமையினால், இவை இலங்கையைக் காவல் செய்யும் ஐம்படை வீடுகளென நாம் கூறிக்கொள்ளலாம்.

தமிழ் கூறும் தொல்லுலகமாகிய குமரிக்கண்டத்தை, காலவெள்ளமாகிய கடல் கொண்டதென்பது கீழைத்தேச மேலைத்தேச அறிஞர் பலரின் தேற்றமாகும். அக்குமரிக்கண்டத்தின் கூறே ஈழமுமாகும். அந்நேரம் இப்பிரதேசத்தைக் கடலால் விழுங்கப்படவிடாது ஒரு சிறு தீவாக இறைவன் விளங்க வைத்தலும் இங்கு முன்னர் கூறப்பட்ட ஐம்பெரும் தலங்களதும் – தீர்த்தங்களதும் மகிமையையும் பெருமையையும் அழியவிடாது பாதுகாத்தற் பொருட்டே என நாம் ஊகிக்க இடமுண்டு. இத்திற மாண்பு பெற்ற நீராடு துறைகளில் ஒன்றாகிய கீரிமலைத் தீர்த்த மகிமையினை ஒட்டி எழுந்த திருத்தலமே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆகும்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் யாழ்ப்பாணப் பட்டணத்திலிருந்து காங்கேசன்துறை செல்லும் நெடுஞ்சாலையில் 10ஆவது கல் தொலைவில் அமைந்திருக்கிறது. காங்கேசன்துறைப்பட்டின சபை, தெல்லிப்பழை, மயிலிட்டி ஊராட்சி மன்றங்கள் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டிருப்பது. இதற்கு இரும்புப் பாதைத் தொடர் வண்டி மூலமும், தெரு வண்டிகள் மூலமும் செல்லலாம். தெல்லிப்பழையை அடுத்த மாவிட்டபுரம் இதன் தொடர் வண்டி நிலையம். கிழக்கே இரண்டு கல் தொலைவில் பலாலி விமானத்திடல் அமைந்திருக்கின்றது. காங்கேசன்துறை வடக்கே ஒரு கல் தெலைவிலும், கீரிமலை நன்னீரூற்று மேற்கே ஒன்றரைக் கல் தொலைவிலும் அமைந்திருக்கின்றன.

எங்கள் நாட்டில் இரு வகையில் அமைந்த கீர்த்தி வாய்ந்த முருகன் திருக்கோயில்கள் உள. சிவாகம சிற்ப நூல் அமைவு பெற்றவை ஒரு வகை. அவ்வமைவு பெறாதவை இன்னொரு வகை. இவை மடாலயங்களெனப்படுபவை.

மாவிட்டபுரம், கந்தவனக்கடவை, இணுவில், நீர்வேலி, அநுராதபுரம் போன்ற இடங்களில் உள்ள கோவில்கள் சிவாகம சிற்பமுறையில் அமைந்தனவாகும்.

கதிர்காமம், மண்டூர், வெருகல், செல்வச்சந்நிதி, நல்லூர் போன்ற ஆலயங்கள் மடாலய வகுப்பினவாகும். இவற்றுள் சிவாகம, சிற்பநூல் அமைவுபெற்ற வரிசையில் சரித்திரப் பிரசித்தி மிக்க பெருங்கோயில் மாவிட்டபுரமாகும்.

பல ஊர் மக்களுக்கு வழிபடு கோயிலாகவும், குல தெய்வமாகவும் விளங்குவது மாவிட்டபுரம். வரலாற்றின்படி கி.பி. 9ஆம் நூற்றாண்டில் திசை உக்கிரசோழன் என்னும் வளவன் ஒருவன் சோழநாட்டில் இருந்தான். அவனுக்கு ஒரு மகள், பெயர் மாருதப்புரவிகவல்லி. இவள் தோற்றம் குதிரைமுகமு ) மானுட உடலும் கொண்டிருந்தது.

சாந்தலிங்கன் என்னும் சந்நியாசி ஒருவனின் கூற்றுப்படி இப்பெண் கீரிமலைக்கு வந்தனள். அங்கு தவ சிரேட்டராக விளங்கிய நகுல முனிவரிடம் உபதேசம் பெற்று, கீரிமலைக் குன்றருகே உவர் நீர் மத்தியில் நன்னீரும், அருவி நீரும் கலந்த இடமொன்றில் நாள்தோறும் சிவ சிந்தையுடன் நீராடி வந்தாள். நாளடைவில் இந்நீராடலால் அவளது குதிரை முகம் மாறி குமரி முகம் ஆயது. அந்நாளில் அவள் தன் சேடியருடன் தங்கியிருந்து தீர்த்தமாடிய இடம் "குமாரத்தி பள்ளம்" என்றழைக்கப்பட்டது. (இன்றைய காங்கேசன்துறைச் சீமெந்துச் தொழிற்சாலை வாயிலுக்கு நேரே கிழக்கு முகமாக இருக்கும் குமார கோயிலடிதான் குமாரத்தி பள்ளம் என்று கூறப்படுகின்றது.)

நீராடிய பின்னர் வழிபாடாற்றிய கோயில் கதிரையாண்டவர் கோயில்; அக்கோயில் இருந்த இடம் கோயிற் கடவை. (இன்று இவ்விடம் வளவுடை என வழங்கப்படுகிறது.) இதன் அருகில் இன்று அழிந்த நிலைக் கேணி ஒன்று இருக்கக் காணலாம். இன்றைய கோயிலில் இருந்து மேற்கே 200 யார் தொலையிற் காணப்படுவது கதிரையாண்டவர் கோயில்.

குதிரை முகம் நீங்க அருள்பாலித்த இறைவன் பதியாக அது இருந்ததினால் கோவிற்கடவை, பின்னர் "மாவிட்டபுரம்" என மறுபெயர் கொண்டதாகக் கூறப்படும். மா–குதிரை, விட்ட–நீங்கி, புரம் – இடம், குதிரை முகம் நீங்கிய இடம் – மாவிட்டபுரம். இக்காரணப் பெயரே பெருவழக்கில் இன்று பேசப்படுகின்றது. ஆயின், மாருதப்புரவிகவல்லியோடு வந்த தளபதி பெயர் "மகாவிட்டன்" என்றும், பின்னாளில் கோயில் ஆட்சிப் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்து அவனை இருக்க வைத்த இடம் இன்றைய மாவிட்டபுரம் என்றும், மகாவிட்டன் வசித்த இடமாதலின் அப்பெயர் மருவியே மாவிட்டபுரம் ஆயிற்று எனவும் யாழ்ப்பாணச் சரித்திர ஆசிரியர் "நாவலர்

கோட்டம்" ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் கூறுவர்.

மேலும் சூரசங்காரத்தின் பின் முருகப் பெருமான் கதிரைமலைக்கு எழுந்தருளிச் செல்லுங்காலை, இங்கு தங்கிச் சென்றாரென்ற ஐதீகம் இருப்பதால், இவ்விடம் முருகன் அருள்பெற்ற இடமாகவும் கூறப்படுகின்றது. இக்கருத்தை ஏற்போர் "மா" என்றால் மாமர வடிவாகிய சூரன் என்றும், "விட்ட" என்றால் அவ்வடிவினைவிட்ட என்றும், "புரம்" என்றால் இடம் என்றும் கூறி மாமர வடிவாக நின்ற சூரன் அவ்வடிவினை விட்டேகிய இடமாதலின், இவ்விடம் "மாவிட்டபுரம்" எனக் கூறப்படுவதாகக் கூறுவர். இவர்கள் கூற்றை ஏற்போர் இவ்வாலயத் தலவிருட்சமாக மாமரமும், அண்மையில் கடலும் இருப்பதைச் சான்று காட்டி உறுதி செய்கின்றனர்.

தனக்கு வாழ்வளித்த கதிரை ஆண்டவன் கோயிலை மாருதப்புரவிகவல்லி கட்டுவித்தாள் எனவும், அதற்கு வேண்டிய பொருளையும், திருவடிவங்களையும், பெரியமனத்துளார் எனும் தில்லைத்தீட்சிதர் மரபு அர்ச்சகரையும், ஏனைய ஏவல்களையும் சோழவளவன் அனுப்பிவைத்தான் எனவும் வரலாறு கூறும். காங்கேசப் பெருமானாகிய கந்தப்பெருமானின் கோயிற் திருப்பணிகளுக்கு வேண்டிய திருவடிவங்களும், ஏனைய பிறவும் வந்திறங்கிய துறை அன்று தொட்டு காங்கேசன்துறை என்று அழைக்கப்பட்டு வருகின்றன.

கோயிற்றிருப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலை உக்கிரசிங்கன் என்ற இளவரசன் மாருதப்புரவிகவல்லியை மணந்து கொண்டதாயும், அவனது அரசிருக்கை கதிரைமலையாக இருந்ததெனவும், மாருதப்புரவிகவல்லியை மணந்த பின்னர் தன் அரசிருக்கையோடு இருந்த இடத்தை நெல்வயல்களாக்கி, அவற்றை அவளால் கட்டுவிக்கப்பட்ட கந்தசுவாமி கோயில் நித்திய நைமித்திய பூசைகளின் பொருட்டும், ஆலய அர்ச்சகர்களுக்காகவும் பிரமதாயமாக வழங்கிவிட்டுத் தன் அரசிருக்கையை யாழ்ப்பாணத்தின் வடகீழ்ப் பகுதியில் உள்ள சிங்கை நகருக்கு – வல்லிபுரக் குறிச்சிக்கு மாற்றினான் எனவும் கூறப்படுகின்றது. கந்தசுவாமி கோவில் வழிபாட்டிற்காக விடப்பட்ட இடமான படியினாலே பண்டைய இராசதானியாக இருந்த "கதிரைமலை" கந்தரோடை எனப் பெயர் மாற்றம் பெற்றதாகவும் வரலாறு கூறும். (கந்தர் – கந்தசுவாமியார், ஓடை – குளவெளி). இன்றைய கந்தரோடையை உள்ளடக்கி இருக்கும் சுன்னாகத்தில் எழுந்தருளியுள்ள கதிரைமலைச் சிவன்கோவிலுக்கும், பண்டைநாட் கதிரைமலைக்கும் ஏதாவது தொடர்புண்டா என்பது ஈண்டு கவனத்திற் கொண்டு ஆராயற்பாலதாகும்.

இன்னும் மாருதப்புரவிகவல்லி தன் குன்மநோய் நீங்கி, இளமையும் அழகும் உடையவளாய் விளங்கிய காலத்தில் தங்கிய குறிச்சியை உள்ளடக்கிய ஊர் "தல்லிப்பள்ளி" எனப்பட்டதாகவும், தல்லிப்பள்ளி மருவியே, "தெல்லிப்பளை"

ஆயதாகவும் கூறப்படும் கருத்தும் இவ்விடத்தில் உற்றுநோக்கற்பாலதாகும். (தல்லி – இளமை உடையவள், பள்ளி – சிற்றூர்).

இன்று கடலருகில் காணப்படும் சடையம்மா மடத்திற்கு அருகில் உள்ள தீர்த்தமே நகுலமுனி, மாருதப்புரவிகவல்லி போன்றோர் நீராடி நன்மை பெற்ற "அந்தர்வாவி" எனும் கண்டகி தீர்த்தமாகும்.

ஆன்மாக்களை ஆட்கொள்ளும்பொருட்டு இறைவன் கொள்ளும் வடிவங்களுள் கருணை வடிவான தீர்த்தமும் ஒன்றாகும். இதனால் அன்றோ "தீர்த்தன்" என்று சிவபெருமான் பேசப்படுகின்றான். இறைவன் தீர்த்தவடிவு அவனது அனுக்கிரகத்தைக் குறிப்பதாகும். மெய்யன்புடன் கீரிமலையில் நீராடுவோர்க்கு அனுக்கிரகம் சித்திக்கும் என்பதனை நிலைநாட்டி வற்புறுத்திக் காட்டுவதே, ஆர்த்த பிறவித் துயர்கெட மாருதப்புரவிகவல்லி ஆர்த்தா வழிபாடாற்றி வந்த பேறாகிய முகமாற்றமாகும்.

இவ்வாறு மாருதப்புரவிகவல்லியினால் எடுக்கப்பட்ட திருக்கோயில் காலத்துக் காலம் வளர்ச்சிபெற்றுப் பிரசித்தமான பெருங் கோயிலாக இருக்கும் நாளில், போர்த்துக்கேயர் இந்நாட்டைக் கைப்பற்றினர். அவர்களது ஆட்சிக்காலத்தில் தகர்க்கப்பட்ட சைவ ஆலயங்களின் எண்ணிக்கைகளில் மாவிட்டபுரமும் ஒன்றாகும். அந்நேரம் கோயில் பொருட்களையும் திரு உருவங்களையும் கிணற்றுள் போட்டு வைத்துக் காப்பாற்றியவர், அக்காலத்தில் கீரிமலையைச் சார்ந்த ஆலயங்களில் ஆட்சிப் பொறுப்பாளராக இருந்த சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்களாவர். போர்த்துக்கேய ஆட்சி ஒழிந்து ஒல்லாந்தர் ஆட்சியின் கடைக்கூறாகிய 1782இல் சிவஸ்ரீ சபாபதி ஐயர் என்பவரினால் மாவிட்டபுரம் புனர்நிர்மாணம் செய்யப்பெற்றுப பண்டுபோல் விழாக்கள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டன. புனர்நிர்மாணம் செய்யப்பட்ட இவ்வாலயம் காலத்துக்குக் காலம் ஆட்சிப் பொறுப்பேற்ற மரபுவழிப் பரிபாலன அறங்காவலர்களாலும், அடியவர்களாலும் மேலும் மேலும் விரிவுபடுத்தியும் செப்பனிட்டும் பெருங்கோவிலாக்கப்பட்டதாகும்.

இன்று இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், தம்பமண்டபம், நிருத்த மண்டபம், வசந்தமண்டபம், தட்டி மண்டபம் – வில்லு மண்டபம், வேட்டை மண்டபம், யாகசாலை, பாகசாலை, களஞ்சியம் ஆகியவை முறையாகக் கட்டப்பட்டுள்ள ஒரு பெருங்கோவில் முறையில் அமைந்துள்ளது. கருவறை தொடங்கி அர்த்தமண்டபம் வரையான கோவில் கருங்கற்றழிக் கோயிலாக 1927இல் கட்டி முடிக்கப்பட்டு, அவ்வாண்டு ஆனி சுவாதியில் திருக்குடத் திருமஞ்சனம் நடைபெற்றது. கருவறையில் கோலமாமஞ்ஞை தன்னில் முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை உடன் கூறுமடியார்கள் வினைதீர்க்கும் முகபாவனையில், கருணை நெறிபுரியுமன்பர்க்

கெளியோகா அருளொடு விளங்குகின்றார். இங்கு பிரதிட்டை செய்யப்பட்டனவும், எழுந்தருளச் செய்யப்பட்டனவுமான ஏனைய மூர்த்திகள் விபரம் : விநாயகர், நடேசர், சந்திரசேகரர், ஆறுமுகசுவாமி, முத்துக்குமாரசுவாமி, சுப்பிரமணியர், சந்தானகோபாலர், மகாலட்சுமி, வைரவர், தண்டாயுதபாணி, நவக்கிரகங்கள், சண்டேசுவரர் என்பனவாகும். இங்குள்ள சிவகாமி பங்கராகிய நடேசர் திருவுருவம் சிதம்பரத்திலிருந்து தருவிக்கப்பட்டதாகும்.

இவ்வாலயத்தின் மேற்குப்புறத்தே காட்சி கொடுக்கும் இராசகோபுரத்தின் திருஉருவங்கள் கோயிலின் வரலாற்றைத் தெளிவுபடுத்துவதுடன், இக்கோவிலுக்கு மட்டுமன்றி ஈழநாட்டுக்கே பெருமை கொடுக்கும் பெருங்கோபுரமொன்றாகவும் மிளிர்கின்றது. இதனைக் கட்டிமுடிப்பதற்கு வேண்டும் பொருளுதவி புரிந்தவர் இரங்கூன் பண்டாரம் எனக் கூறப்படும் அருட்திரு நாகலிங்க தேசிகராவர். இதனைப் பரிபாலிப்பதற்கென அப்பெரியாரால் ஏற்பாடு செய்யப்பட்ட அறக்கட்டளை ஒன்றுண்டு. காங்கேசன்துறையிலுள்ள நாகலிங்கேசுவர மடாலய பரிபாலன அறக்கட்டளையே அதுவாகும்.

இன்று நாளாந்தம் இங்கு ஆறுகாலப் பூசைகள் நன்றாக நடைபெற்று வருகின்றன. கிழமை தோறும் வெள்ளிக்கிழமைகளில் காலை, மாலையிலும், மாதந்தோறும் கார்த்திகை நட்சத்திரத்திலும், சித்திரை, தை மாதப்பிறப்பு நாட்களாகிய சங்கிராந்திகளிலும் முத்துக்குமார சுவாமிக்குச் சிறப்பான மஞ்சன நீராட்டும் பூசைகளும் நடைபெறுகின்றன. இப்பெரு நாட்களில் உற்சவ மூர்த்தியாகிய முத்துக்குமாரசுவாமி உள்வீதி எழுந்தருளுவார்.

**விசேட உற்சவங்கள் :**

இவ்வாலய மகோற்சவம் பூர்வபக்கச் சஷ்டித் திதியோடு கூடிய ஆனி உத்தர நாளன்று கொடியேற்றமும், ஆடி அமாவாசையன்று தீர்த்தமும், அதற்கு முந்திய இருபத்து நான்கு நாட்களுக்குத் திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெறும். இந்நாட்களில் நடைபெறும் ஆறுமுகசுவாமி திருநடனத் திருவிழா, கார்த்திகைத் திருவிழா, வேட்டைத்திருவிழா, பட்டுக்குடைத் திருவிழா, சப்பரத் திருவிழாப் போன்றவை சிறப்பான திருவிழா நாட்களாகும். உற்சவகால ஆறுமுகசுவாமி திருநடனத் திருவிழாவைத் தொடக்கிவைத்தவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தவர்களாவர். உற்சவகால ஐந்தாம் திருவிழா நாள் இதுவாகும். இவ்வுபயத்திற்கென காங்கேசன்துறையில் ஒரு கிட்டங்கியை அவர்கள் எழுதிவைத்துள்ளனர். நாட்டுக்கோட்டைச் செட்டிகளினால் வழங்கப்பட்ட தேர் வடிவான விளக்கு ஆலயத்திற்கு இன்றும் ஒளியூட்டிக் கொண்டிருப்பது ஈண்டு குறிப்பிடத் தக்கதாகும்.

தேருக்கு வரும் பஞ்சமூர்த்திகள் விநாயகர், சுப்பிரமணியர், சந்திரசேகரர், ஆறுமுகர், சண்டேசுரர் ஆகியோராவர். தேர்த்திருவிழா அன்று மாலை தேர்முட்டியடியில் நடைபெறும் சண்முகார்ச்சனையின் பின்னர் பஞ்சமூர்த்திகள் இருக்கைக்கு எழுந்தருளும் போது மலர்மாரியுடன் வேதஒலியும், திருமுறை ஓசையும், நாதகானமும் முழங்க, பத்தித் திருமுகமாறுடன் பன்னிரு கைகளுாய்த் தித்தித்திருக்கும் திருஅமுது கண்டேன் என அருணகிரி கூறும் ஆறுமுகப் பெருமானுக்கு நடைபெறும் பன்னீராட்டு, இந்நாட்டில் வேறெங்கும் காணாக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

"கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்" என அப்பர் பெருமான் கூறும் திருக்கைலைக் காட்சியை, கைலாசபதியாகிய எம்பெருமான் அப்பர் பெருமானுக்கு திருவையாற்றில் காட்டிய நாள் ஆடி அமாவாசை நாளாகும். கூறுமடியார்கள் வினை தீர்த்தருள மாவைக்கந்தன் தீர்த்தம் கொள்ள எழுந்தருளும் பெருநாளும் அப்புண்ணிய நன்னாளேயாம்.

இவை தவிர, தைப்பூச நாளன்று ஆறுமுகசாமி தேரில் திருவீதி உலா வருதலும், மார்கழி ஆருத்ராதரிசனத்துக்கு முதல்நாள் நடேசர் தேரில் திருவீதி உலாவருதலும் இவ்வாலய வழக்கமாகும்.

ஆண்டுதோறும் கந்தபுராணப்படிப்பு வைகாசி மாதத்தில் ஆரம்பித்து, மகோற்சவ இரண்டாம் நாள் முடிவடையும். ஐப்பசி மாதக்கந்தசட்டி காலத்தில் திருச்செந்தூர்ப் புராணம் படித்துப் பயன் சொல்லப்படும். சூரன்போர் இங்கு வெகு சிறப்பாக நடைபெறுவது வழக்கம்.

இவ்வாலயத்திற்குச் சொந்தமான சுவடிச்சாலை ஒன்று உண்டு. அதில பன்னூற்றுக்கணக்கான சமயச்சார்புள்ள கிரந்த நூல்களும், தமிழ் நூல்களும் இருக்கக காணலாம்.

புரட்டாதி மானம்பூவன்று முருகப்பெருமான் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு அடியார் புடைசூழ எழுந்தருளி வருவது பல ஆண்டுகால வழக்கம். இவ்வாலய அர்ச்சகர்கள் ஆதிசைவ மரபில் வந்தவர்கள். கோயில் நிர்வாக பரிபாலன உரிமை மரபு வழியாக அவர்களுக்கே உரியது. கோயில் மூன்று திருச்சுற்று வீதிகளை உடையது. கோயிலைச்சூழ நாற்புறமும் பல மடங்கள் உள்ளன. கோயிலுக்கெனத் தனியான நந்தவனம் ஒன்றும் உண்டு. இவ்வாலயத் தொழும்புக்குரியோர் பழைமையும், மரபுரிமையும் பேணியே நடந்து வருகின்றனர்.

கோயிலிருக்கும் வளவுப்பெயர் கொவ்வங்கட்டுவளவு. கோயிலுக்குரிய நட்சத்திரம் சுவாதி, தலவிருட்சம் மா. தீர்த்தம் கீரிமலைக் கடல். உறுதியின்படி கோயிற்

காணிக்கு உரியவர் அம்பலவாணர் கந்தர். இன்று ஆட்சிப்பொறுப்புக்குரிமை உடையவர் சிவஸ்ரீ சண்முகநாதன் குருக்கள்.

இவ்வாலயத் திருப்பணிகளைக் கவனிப்பதற்காக "மாவைக்கந்தன் ஆலயத் திருப்பணிச்சபை" என்ற பெயரில் 7-6-75இல் சபையொன்று அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டது. இச்சபை இன்று பல நல்ல கைங்கரியங்களைச் செய்து வருகின்றது. இவ்வாலயம் படிப்படியாக முன்னேறிப் பழையகால உன்னத நிலையை விரைவில் எட்டிப்பிடிக்கும் என்பது அடியார்களது பெருநம்பிக்கையாகும்.

மாவைக்கந்தன் மீது செஞ்சொற்பாமாலை பாடியோர் பெயர் விபரம்

| | பாடியவர் பெயர் | பாடல் |
|---|---|---|
| 1. | முத்துக்குமார கவிராயர் | மாவைச் சுப்பிரமணியர் தோத்திரம் |
| 2. | இருபாலை சேனாதி கவிராயர் | மாவைப்பதிகம், மாவை ஊஞ்சல் |
| 3. | சுன்னாகம் அ.குமாரசாமிப்புலவர் | மாவைப்பதிகம், மாவை இரட்டை மணிமாலை, மாலைவக் கலிவெண்பா |
| 4. | வறுத்தலைவிளான் க.மயில்வாகனப்புலவர் | மாவைப்பதிகம், மாவைக்கந்தரகவல், மாவைக்கந்தர் சிங்காரம் |
| 5. | க. சரவணமுத்துப்புலவர் | மாவைப்பதிக், மாவைக்கதிர்காம வடிவேலவர் பதிகம், மாவை ஊஞ்சற்பாக்கள் |
| 6. | ம. சரவணமுத்துப்புலவர் | மாவை ஊஞ்சற்பாக்கள் |
| 7. | வே.அப்பாக்குட்டி | மாவிட்டபுரம் கந்தசுவாமி பேரில் பதிகம் |
| 8. | பூநகரி முருகேசர் கனகசபை | போற்றித் திருவகவல், மாவைப்பதிகம் |
| 9. | கரணவாய் தி.செவ்வந்திநாத தேசிகர் | மாவை மும்மணிமாலை |
| 10. | சபாபதி நாவலர் | மாவை அந்தாதி |
| 11. | தா.மு.பூ. பொன்னம்பலபிள்ளை | மாவை யமகவந்தாதி, மாவை திருவிரட்டை மணிமாலை, ஆறெழுத்துப்பத்து |
| 12. | மாவை குமாரசுவாமிக் குருக்கள் | மாவைப் புராணம், மாவைப்பதிகம் |
| 13. | பொ. சபாபதிப்பிள்ளை | மாவிட்டபுரம் தோத்திரப் பாமாலை |
| 14. | க. சச்சிதானந்தம் | மாவை முருகன் |
| 15. | நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர் | மாவை நகர முருகவேள் பதிகம் |
| 16. | ஆசுகவி வயாவிளான் கல்லடி வேலுப்பிள்ளை | மாவை தோத்திர விருத்தம் மாவைக் கந்தரஞ்சலி |
| 17. | மயிலிட்டி சி. வேலுப்பிள்ளை உபாத்தியாயர் | மாவைக்கீர்த்தனைகள், மாவைப்பதிகம் |
| 18. | மகாவித்துவான் சிவஸ்ரீ சி. கணேசையர் | மாவை சுப்பிரமணியர் தோத்திர விருத்தம் |
| 19. | ந. சிவப்பிரகாசன் | மாவை முருகன் கீர்த்தனைகள் |

| | | |
|---|---|---|
| 20. | அருட்கவி சீ. விநாசித்தம்பி | மாவிட்டபுரம் தண்டபாணிக்கந்தன் திருப்பதிகமும் தோத்திரப் பாமாலையும் |
| 21. | ஏழாலை பண்டிதர் மு. கந்தையா | மாவைப் பிள்ளைத்தமிழ் |
| 22. | விசுவநாத சாத்திரியார் | மாவைக் குறவஞ்சி |
| 23. | இ.சி. கந்தையா ஆச்சாரி | மாவைக் கந்தர் தோத்திரமாலை |

மாவைக்கந்தன் வரலாறு கூறும் நூல்கள்

| ஆசிரியர் பெயர் | நூற்பெயர் |
|---|---|

வரலாறு கூறும் வசன நூல்கள் :

| | | |
|---|---|---|
| 1. | சிவஸ்ரீ சு.து. சண்முகநாதக் குருக்கள் | மாவிட்டபுரத் திருத்தல வரலாறு |
| 2. | இரா. சுந்தரராசர்மா | கோயிற்கடவை |

நாடக நூல்

| | | |
|---|---|---|
| 1. | த. சண்முகசுந்தரம் | "வாழ்வு பெற்ற வல்லி" |

மாவிட்டபுரம் பற்றிய குறிப்புகள் வரும் ஏனைய நூல்கள் :

| | | |
|---|---|---|
| 1. | முத்துராச கவிராயர் | கைலாயமாலை |
| 2. | | வையா பாடல், ஈழமண்டல சதகம் |
| 3. | திருமலை மாசிலாமணி முத்துக்குமாருப் புலவர் | திருக்கோணசல புராணம் |
| 4. | நா. கதிரைவேற்பிள்ளை | சுப்பிரமணிய பராக்கிரமம் |
| 5. | மாதகல் ஏரம்பயைர் | நகுலாசல புராணம் |
| 6. | கா. அப்பாசாமி ஐயர் | நகுலகிரிப் புராணம் |
| 7. | மயில்வாகனப் புலவர் | யாழ்ப்பாண வைபவமாலை |
| 8. | வட்டுக்கோட்டை விசுவநாத சாத்திரியார் | நகுலமலைக் குறவஞ்சி |
| 9. | கல்லடி வேலுப்பிள்ளை | யாழ்ப்பாண வைபவ கௌமுதி |
| 10. | செ. இராசநாயக முதலியார் | யாழ்ப்பாணச் சரித்திரம் |
| 11. | ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை | யாழ்ப்பாணச் சரித்திரம் |
| 12. | வண. ஞானப்பிரகாசர் | யாழ்ப்பாணம் வைபவ விமர்சனம் |
| 13. | எஸ். டபிள்யு. குமாரசுவாமி | இடப்பெயர் ஆராய்ச்சி |
| 14. | கா. மதியாபரணம் | யாழ்ப்பாணம் பூர்விக வைபவம் |

திக்குத் திசைகெட்டு, இடத்துக்கிடங்கிடந்த மேற்கூறிய புலவோர் பாடல்களையும், வரலாற்று நூல்களையும், ஏனைய குறிப்புக்களையும் அரிதில் முயன்று தேடி எடுத்து "மாவை முருகன் கவிப்பூங்கொத்து" என்ற பெயரில் தொகுப்பு நூல் ஒன்றை 1977இல் பதிப்பித்துள்ளார் இளவாலை மயிலங்கூடல் வாழ் பண்டிதர் சைவப்புலவர் சி. அப்புத்துரை. இந்நூலுக்கு அரும்பதக் குறிப்புக்களோடமைந்த உரையொன்று செய்யப்பெறின் இவ்வாலயத்தினதும் நூலினதும் சிறப்புக்கள் மேலும் பெருமை பெற்றோங்கும் என்பதுறுதி.

குறிப்பு :

மாவிட்டபுரம் முருகப்பெருமான் வேட்டைத் திருவிழா நாளன்று திருவுலா வருட் காட்சியை, நாமாந்தரிகை என்னும் பிரகேளிகை வகையமைத்து, உடுவிற்பதி வாழ்ந்த முத்துக்குமார கவிராயர் அவர்களினால் பாடப்பட்ட பாடல்கள் சிலவற்றை இங்கு குறிப்பிடுதல் சாலப் பொருத்தமானதேயாம்.

"பிரகேளிகை" ஆவது சொல்லக்கருதிய பொருளை ஆழ்ந்து கிடக்குமாறு மறைத்து, வெளிப்படையில் வேறொன்றுபோற் காட்டிப் புலவர்களை மயக்கி விநோதம் புரிதற்குரிய சொற்களால் பாடப்படுவது. "நாமாந்தரிகை" ஆவது வெளிப்படையில் நாமம் வேறொன்றைக் காட்டிக் கருதிய பொருளை மறைத்திருப்பது. பாடல்களின் பாங்கைப் பார்க்கவும்.

"மல்லாக மாதகலான் மருகன் சுன்
னாகத்தான் மதன்பா வாணர்
சொல்லாச்சீர் ஈவினையான் துன்னாலை
யானத்தான் கரும்ப ரோதி
சில்லாலை யிருள்வென்ற குறக்கொடிகா
மத்தானைச் சிகண்டி மாவூர்
வல்லானை மாவிட்ட புரநகரத்
திடைப்பவனி வரக்கண்டேனே."

இங்கே கருதிய பொருளை மறைத்துக்கொண்டு வெளிப்படையிலே வேறொன்றாகத் தோன்றும் பெயர்களாவன : மல்லாகம், மாதகல், சுன்னாகம், ஈவினை, துன்னாலை, சில்லாலை, கொடிகாமம் என்னும் ஏழு ஊர்ப்பெயர்களாகும். இவ்வூர்ப் பெயர்களில் மறைந்து நிற்கும் பொருள்கள் ஆவன : மல் ஆகம் மாது அகலான் மருகன் – வலிமைமிக்க திருமார்பிலே திருமகள் நீங்காதிருக்கப் பெற்றவராகிய திருமாலுக்கு மருகரும், (சுல், நாகம் ஸ்ரீ சுன்னாகம்) சுல் – வெள்ளி, நாகம் – மலை, சுன்னாகத்தான் மகன் – வெள்ளியங்கிரியில் வீற்றிருக்கும் பரமேசுவரமூர்த்தியுடைய திருக்குமாரரும், பாவாணர் சொல்லாச்சீர் ஈவினையான் – தம்முடைய மெய்யன்பராய் உள்ளவர்களுக்கு யாவற்றிலும் சிறந்ததாகிய முத்தியின்பத்தினை

இடையீடின்றிக் கொடுக்குந் தொழிலையுடையவரும், துன்னாலையான் அத்தான் – நெருங்கிய கரும்பு வில்லையுடைய மன்மதனுக்கு மைத்துனரும், கரும்பர் ஓதி சில்லாலை ஐ இருள் வென்றான் – வண்டு வீழ்கின்ற கூந்தலில் உள்ள தகட்டணியால் செறிந்த இருளை வெற்றிகொண்ட, குறக்கொடிகாமத்தானை – வள்ளிநாயகியின் மீது இச்சையுடையவரும், சிகண்டிமா ஊர் வல்லானை – தோகைமயில் என்னும் புரவியைச் செலுத்த வல்லவருமாகிய முருகக் கடவுளை, மாவிட்டபுர நகரத்திடைப் பவனிவரக் க்ணடேனே. மாவிட்டபுர நகரத்திலே திருவுலா வரக் கண்டேன்.

"முடிவி லாதுறை சுன்னாகத் தான்வழி
முந்தித் தாவடிக் கொக்குவின் மீதுவந்
தடையை வோர்பெண் கொடிகாமத் தாளசைத்
தானைக் கோட்டை வெளிகட் டுடைவிட்டாள்
உடுவி லான்வரப் பன்னாலை யான்மிக
உருத்த னன்கடம் புற்றமல் லாகத்தில்
தடைவி டாதணை யென்றுப லாலிகண்
சார வந்தனள் ஓரிள வாலையே,"

இங்கே சுன்னாகம், தாவடி, கொக்குவில், கொடிகாமம், ஆனைக்கோட்டை, கட்டுடை, உடுவில், பன்னாலை, மல்லாகம், பலாலி, இளவாலை ஆகிய பதினொரு ஊர்களின் பெயர்கள் கூறப்படுகின்றன.

"சுன்னாகம்" என்பதைச் சுல் + நாகம் என்று பிரிக்கலாம். சுல் + வெள்ளி, நாகம் – மலை. சுன்னாகம் – வெள்ளிமலை. வழி – பிள்ளை. முடிவிலாதுறை சுன்னாகத்தான் வழி – ஆதியும் அந்தமுமில்லாத வெள்ளிமலையாகிய கைலாசத்தில் இருக்கின்ற சிவபெருமானுடைய பிள்ளையாகிய கந்தசுவாமி, முந்தித் தாவு அடிக் கொக்குவில் மீது வந்து அடைய – (கொக்கு என்பது குதிரை) முந்தித் தாவுகின்ற (அடி – கால்) கால்களுடைய குதிரை வாகனத்தில் பவனிவர, ஓர் பெண் கொடி காமத்தாள் – ஒரு பெண் கொடி (தலைவி) காதல் கொண்டவளாய், அசைத்து ஆனைக்கோட்டை வெளிக்கட்டு உடை விட்டாள் – தன் நிலையைக் குலைத்து மார்பிற் கட்டிய உடையையும் நெகிழவிட்டாள் : உடுவிலான் வர – அந்தச் சமயத்திலே, (உடு – நட்சத்திரம், இல் – மனைவி) நட்சத்திரத்தை மனைவியாகக் கொண்ட சந்திரன் உதயம் ஆனான்; ஆக, பன்னாலையான் மிக உருத்தனன் – (ஆலை – கரும்பு) கரும்பு வில்லையுடைய மன்மதன் கோபித்தான்; ஓர் இளவாலை – அந்த ஒப்பற்ற இளம்பெண் – கந்தசுவாமியைக் காதலித்தவள் ; கடம்பு உற்ற மல் ஆகத்தில் – கடம்பமாலை அணியப்பெற்ற மல்யுத்தம் செய்கின்ற மார்போடு, தடைவிடாது அணையென்று – இடையீடு இன்றி அணைத்தருள வேண்டுமென்று, பல ஆலி – பல நீர்த்துளிகள், கண்சார வந்தனள் – கண்ணினின்றும் சொரிய, கந்தசுவாமிக்கு எதிரே – திருவடியே

சரணமென்று, வீதியிலே பவனியை எதிர்கொண்டாள். இது பாட்டின் உரை விளக்கம்.

முருகக் கடவுள் குதிரையில் பவனிவருதலைக் கண்ட பெண்களுள்ளே ஒருத்தி ஆட சோரப்பெற்றாள் எனவும், மற்றொருத்தி கண்ணீர் உதிர்த்தனள் எனவும், கடவுள் முயக்கம் விரும்பிய மானிடப் பெண்கள் இருவர் கொண்டநலிவு கூறிய பாடாண்திணை இதுவாகும்.

"பன்னி ரண்டு கரகந்த எட்டுப்
பானை யைத்துண் டதரக் குயவனை
முன்னி ரண்டு குடங்கையில் ஏந்தியை
முட்டி முட்டிமல் லாய்ாவைச் சாடியைப்
பொன்னி ரண்டு பெறும்பெருஞ் செட்டியைப்
போற்று வீர்புல வீர்சக ரந்தனை
முன்னர் வைத்த கலசம்பத் தும்பெறீஇ
முதன்மை சால்பெரு வாழ்வுறன் மெய்ம்மையே."

இங்கு கருதிய பொருளை மறைத்துக்கொண்டு வெளிப்படையில் வேறு பொருளாகத் தோன்றும் பெயர்களாவன : கரகம், பானை, முட்டி, குடம், சாடி, கலசம், சால் என்னும் பாத்திரப் பெயர்கள். இவற்றுள்ளே சில பன்னிரண்டு கரகம், எட்டுக் குடப்பானை, இரண்டு குடம், கலசம் பத்து எனத் தொகை பூண்டும் நிற்கின்றன. செட்டி என்பது வணிகர் மரபில் உதித்த காரணம்பற்றி முருகனுக்கு வந்த பெயர்.

இங்கே மறைந்து நிற்கும் பொருள் பன்னிரண்டு கரகந்தனை – பன்னிரு திருக்கரங்களையுடைய கந்தசுவாமியை, எள், தும்பு, ஆனை, ஐ, துண்டம், அதரம், குயம், அனை, முன் இரண்டு குடங் கையில் ஏந்தியை – எட்டுப் பூவினையும், பவளத்தினையும், யானையையும் முறையே நிகர்த்த அழகிய மூக்கு, அதரம், முலை என்பவற்றினை உடைய உலக மாதாவாகிய உமாதேவியாரால் முன்னரே உள்ளங்கை இரண்டினாலும் ஏந்தி வளர்த்தருளப்பட்டவரை, முட்டி முட்டி மல்லார் மாவைச் சாடியை – பலமுறை எதிர்த்துப் போராடி, வலிநிறைந்த மாமரவடிவாக நின்ற சூரபன்மனைக் கொன்றருளியவரை, பொன்னிரண்டு பெறும் பெருஞ்செட்டியை – தெய்வானை வள்ளியம்மை என்னும் மகளிரிருவரையும் மனைவியராகப் பெற்றுக்கொண்ட உருத்திரசன்மராகிய முருகப் பெருமானை, புலவீர் போற்றுவீர் – புலவீர்காள் போற்றக்கடவீர். இப்படிப்போற்றின், சகரம் தனை முன்னர் வைத்த கலசம் பத்தும் பெறீஇ. – கலசம் பத்தும் என்ற சொல்லின் முன் "ச" என்ற எழுத்தை வைத்தால் "சகல சம்பத்து" என நிற்கும். கலசம்பத்து என்பது, வலி, ஆண்மை, கல்வி, பொருள், புகழ் முதலியவாய் இம்மையில் பெறும் பெரும் செல்வங்கள் பெற்று, முதன்மைசால் பெருவாழ்வுறன் மெய்ம்மையே – முதன்மை நிறைந்த பெருவாழ்வை அடைதல்

உண்மை என்பதாகும்.

பிற்சேர்க்கை : (மேற்கண்ட கட்டுரை எழுதப்பட்ட காலத்தின் பின்னரான நிகழ்வுகளின் சுருக்கம்.

உள்நாட்டுப்போரின் தாக்கம் மாவைக்கந்தசுவாமி கோயிலிலும் உணரப்பட்டது. மீண்டும் உக்கிரம் பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாக 20.10.1990ல் கந்தஷஷ்டி உற்சவகாலத்தில் ஆலயத்திலிருந்து ஆதீனகத்தா உட்பட அனைவரும் வெளியேறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. சுமார் ரூபா 10 கோடி பெறுமதியான அசையும் சொத்துக்கள் அப்போது ஆலயத்திலிருந்தன. தொடர்ச்சியான இடப்பெயர்வுகள், இன்னல்கள், பொருளாதார நெருக்கடிகளின் பின் 18.05.1996இல் ஆலயத்தைப் பார்வையிட ஆதீனகர்த்தாவிற்கு அனுமதி கிடைத்தது. ஆலயத்தினுள் புகமுடியாதவாறு மரங்கள் வளர்ந்து புதர்மண்டி காட்சியளித்த ஆலயத்தை மூன்று நாட்களாக சிரமதானம் மூலம் பற்றைகள், மரங்கள் அகற்றிய பின் அண்மிக்க முடிந்தது.

ஆலயத்தில் மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மஹா மண்டபம் தவிர்ந்த ஏனைய அனைத்து பகுதிகளின் கூரைகளும் முழுமையாக சேதமாக்கப்பட்டிருந்தன. மேலும் பிள்ளையார், சிவன், அம்பாள், 80 கிலோ நிறையுடைய தங்கத்தாலான வள்ளி, தெய்வானை சமேத முத்துக்குமாரசுவாமி, சந்தானகோபாலர், சண்டேஸ்வரர், பழனியாண்டவர் போன்ற தெய்வ விக்கிரகங்களும் கோவில் நகைகளும் 180 கிலோ நிறை கொண்ட வெள்ளியிலான கொடிமர கவசங்களும் பெறுமதி மதிக்கமுடியாத அரும்பொக்கிஷமான ஓலைச் சுவடிகளும் குடங்கள், செம்புகள், கெண்டி, தீபங்கள் போன்ற அனைத்துப் பொருட்களும் காணாமற்போயிருந்தன. ஆறுமுகசுவாமியின் முகோத்தரத் தேர் செல்லரித்து பாவனைக்குதவாத நிலையிலிருத்தது. மற்றைய நான்கு தேர்களும் பெரிய சப்பரமும் சின்னாபின்னப்படுத்தப்பட்டிருந்தன.

இவ்வாறாக சிதிலமடைந்த ஆலயத்தை மீளக்கட்டியெழுப்பும் பெரும்பணியை ஆதீனகர்த்தா உடனடியாகவே ஆரம்பித்தார். திருப்பணிக்காக அரச நிதியுதவியும் கிடைத்தது. அடியார்களின் பெரும் ஒத்துழைப்புடன் திருப்பணிகள் நடைபெற்ற வண்ணமுள்ளன. ஸ்நபன மண்டபம், தம்ப மண்டபம், உட்பிரகார வேலைகள் நிறைவடைந்துள்ளன. 3 கோடி ரூபா செலவில் வசந்தமண்டப கட்டுமானங்கள் நடைபெற்ற வண்ணமுள்ளன. பழனியாண்டவர் கோயில் வேலைகள் தெற்கு வாசற்கோபுர வேலைகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. மேலும் பிள்ளையார், வள்ளி, தெய்வானை சமேத முத்துக்குமாரசுவாமி, சிவன், அம்மன், சண்டேஸ்வரர் ஆகிய நூதன உற்சவ மூர்த்திகளுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. மேலும் சந்தானகோபாலர், நாகதம்பிரான் மூர்த்திகளுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. வைரவர் மற்றும் நவக்கிரஹம் என்பவற்றிற்கு 2ம் வீதியில் புதிய கோயில்கள்

நிர்மாணிக்கப்பட்டுள்ளன. தேர்த்திருப்பணிகள், கொடிக்கம்ப திருப்பணிகள் நடைபெற்றவண்ணமுள்ளன. மணிக்கோபுரம் புதுமெருகூட்டப்பட்டு இலண்டன் மாநகரிலிருந்து தருவிக்கப்பட்ட 1000 கிலோ நிறையுடைய புதிய கண்டாமணி பொருத்தப்பட்டு அண்மையில் கும்பாபிஷேகம் நிகழ்ந்துள்ளது.

நித்திய பூசைகள் கிரமமாக நடைபெறுகின்றது. மகோற்சவ காலங்களில் காம்யோற்சவம் பக்திபூர்வமாக நிகழ்கின்றது. 04.03.2011ல் மஹாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள் சிவபதமடைய அவரது புத்திரன் மஹாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றார்.


ஆலய திருப்பணி வேலைகள் விரைவாக நிறைவடைந்து திருக்குடமுழுக்கு நிகழ்ந்து மாவைக்கந்தனின் பரிபூரண அருளாட்சி இடையறாது அனைவருக்கும் கிடைக்க அவன் தாள்பணிந்து வணங்குவோம்.


தொகுப்பு : ப. சேயோன்

உசாத்துணை
"ஈழத்தில் சைவம்"
சைவசமயம் – கொழும்பு விவேகானந்த சபை வெளியீடு.



# மாவைக்கந்தன் விழாக்கால நிகழ்வுகள்





## இலண்டன் நகரிலிருந்து தருவிக்கப்பட்ட 1000 கிலோ உடையுடைய புதிய காண்டாமணி பொருத்தப்பட்ட மணிக்கோபுர கும்பாபிடேகம்





# யோகா: எதிர்கால வாழ்வின் பாதுகாப்பான முதலீடு

திரு. சி. ரமணராஜா
விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**அறிமுகம்**

இந்தியாவில் மிகவும் பழங்காலத்திலிருந்தே குருகுலக் கல்வி முறையில் கற்பிக்கப்பட்டு வருகின்ற யோகாவானது மனதினைக் கட்டுப்படுத்தும் ஒரு முறையாகவும் பேணப்பட்டு வந்திருக்கின்றது. மனதினைப் பற்றிய விரிவான ஆராய்ச்சியும், மன ஆற்றலால் உண்டாகின்ற பல்வேறுபட்ட சாதனைகளும், மனம், உடல், செயலுணர்வுகளின் கட்டுப்பாடு, மற்றும் இயற்கைக்கும் மனிதனுக்குமான ஒத்திசைவு முதலியனவும் இணைந்தவொரு உருவாக்கமாக யோகதத்துவம் உள்ளது. இதன் விளைவாக யோக தத்துவத்தினை "மனவிஞ்ஞானம்" (Science of mind) எனச் சுட்டித்துக் கூறுவர். உடல் மற்றும் உளத்துடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டுள்ள யோகக் கலையானது சமகாலச் செல்நெறியில் இன்றியமையாத ஒன்றாக மக்களின் வாழ்வியலுடன் ஒன்றித்துவிட்டது. இதன் தேவை இன்று உலகளவில் உணரப்படும் நிலையில் அதனை முன்னிறுத்தியாக இக்கட்டுரை அமைகிறது.

**பொருள் விளக்கம்**

யோகம் என்பது சேர்தல், இணைதல் அல்லது பிரிதல் என இருநிலையில் பொருள் கொள்ளப்படுவதுண்டு. பிரிதல் என்பது உயிர்களின் துன்பத்திற்கு காரணமாக விளங்கக் கூடியதான உலகத் தொடர்புகளிலிருந்து நீங்குதலாகும். இணைதல், சேர்தல் என்பது உலகத் தொடர்புகளிலிருந்து நீங்கிய ஆன்மாக்கள் பரம்பொருளுடன் ஒன்றித்தலைக் குறிக்கின்றது. சீவனும் பரம்பொருளும் இணைதலாகிய ஆன்மிகப் புணர்ப்பினை (Spiritual Union) யோகமெனும் சொல் சுட்டித்து நிற்பதாக ஞாக்ய வல்கியர் குறிப்பிடுகின்றார். துன்பத்திற்குப் பிரிவு அடிப்படை என்றும், அத்துன்பத்தினை நீக்க வேண்டுமாயின் ஆன்மிகப் புணர்ப்பு அடைதல் வேண்டுமென்றும் தத்துவ வாதிகள் எடுத்துரைப்பர்.

இந்துசமய இலக்கியங்களில் யோகம் பற்றிய சிந்தனைகள் பரவலாக இடம்பெற்றிருந்தாலும் பதஞ்சலி முனிவரின் யோகசூத்திரம் இதனை விரிவாகவும் விளக்கமாகவும் கூறுகின்றது. மனம், உடல், மூச்சு ஆகிய அப்பியாசங்களினாலும் தியான முறைமைகளினாலும் கிடைத்தற்கரிய பல்வேறு ஆற்றல்களைப் பெற்றிருந்தாலும் இறுதியில் அடையப்பெறுகின்ற மெய்யுணர்தல் என்பது பற்றியதான சிந்தனையே யோகசூத்திரத்தின் அடிப்படைப் பொருண்மையாக உள்ளது. இங்கு

யோகம் என்பது "ஸித்த விருத்தி நிரோதக" என்று விளக்கப்பட்டிருக்கின்றது... 'Yoga is restraining the mind – stuff (-chitta) from taking various forms (-Vrittis) என்று சுவாமி விவேகானந்தர் இதனை மொழிபெயர்த்திருக்கக் காணலாம். ஆகவே, பல்வேறு உருவங்களை எடுக்கும் சித்தத்தினைக் கட்டுப்படுத்தி தடுத்து நிறுத்துதலே யோகம் எனவும், மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண விருத்தி, தூய்மை முதலியவற்றை மேம்படுத்துவதற்குரிய வழிகள் யோக தத்துவத்தினூடாக விளக்கப்பட்டுள்ளன என்பதனையும் அறிந்து கொள்ள முடிகிறது.

## தொன்மையும் தொடர்ச்சியும்

இந்தியச் சிந்தனையாளர்களினது கருத்துப்படி இந்நெறி வேதகாலத்திற்கும் முந்தியதாகும். இந்திய நாகரிகத்தின் தொன்மையை சிந்துவெளி காலத்தை மையமாகக் கொண்டு ஆராய்ச்சியாளர்கள் விளக்குவர். சிந்துவெளியில் இடம்பெற்ற ஆராய்ச்சிகள் மூலம் கிடைக்கப்பெற்ற யோகிபோன்று அமர்ந்திருக்கும் தொல்பொருள் வடிவம் இதன் தொன்மையை வெளிப்படுத்துவதாக அறிஞருரைப்பர். இந்திய தத்துவங்களின் விரிவாக்கத்திற்கு அடித்தளமாக அமைகின்ற உபநிடதங்களாலும், சிறந்த உளவளத் துணை நூலாக விளங்குகின்ற பகவத்கீதையாலும் மனதினைக் கட்டுப்படுத்தும் யோக நுட்பங்கள் கற்றுத்தரப்படுகின்றன.

யோக தத்துவத்தில் மந்திர யோகம், இலய யோகம், ஹட யோகம், இராஜ யோகம் முதலியன முதன்மைக்குரியனவாகப் பேசப்படுகின்றன. இராஜயோக முறைமைகள் யோகசூத்திரத்தில் விரிவாக்கப்பட்டுள்ளன. இலயயோகம் என்பது மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியை படிமுறையில் ஆறாதாரங்களினூடாக சித்தத்தின் உச்சியிலிருக்கும் சிவத்தோடு இணைப்பது என்பர். நம்பிக்கை மருத்துவம் என சுட்டப்படுவதும் நரம்பு, மனம் முதலியவற்றால் பாதிப்புற்றவர்க்கு மந்திர சிகிச்சை அளிப்பதுமே மந்திர யோகத்தில் உள்ளடங்கும். உடலியற் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் அப்பியாச முறைமையே ஹடயோகம் ஆகும். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், ப்ரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் அட்டாங்க யோகமுறைமைகளும் யோகதத்துவத்தில் முதன்மை பெறுகின்றன.

"இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணாயாமம் ப்ரத்தியாகரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறும் அட்டாங்கம் ஆவதும் ஆமே"

என்கிறது திருமந்திரம். பதஞ்சலியும்,

"யம நியமாஸன பிராணயாம பிரத்யாஹார
தாரணா த்யான ஸமாதயோ அஷ்டாவங்கானி"

என்கின்றார். பகவத் கீதைக் கர்ம யோகம், பக்தி யோகம், இராஜயோகம், ஞான யோகம் முதலிய நால்வகை யோகங்களை எடுத்தாள்கின்றது. யோகத்தின் அங்கங்களாகச் சொல்லப்பட்டனவற்றை அப்பியாசம் செய்து மனமாசுகளை அகற்றுகின்ற போது, அங்கே மெய்மையின் விழிப்புணர்வை வளர்க்கின்ற ஆன்மா சார்ந்த பிரகாசம் மேலெழும் என்கிறது பதஞ்சலி சூத்திரம்.

இந்து சமயப் புலத்தில் யோகம் என்பது ஒரு தத்துவ முறையாக விருத்தியுற்றிருப்பினும், அது ஒரு கலையாக மக்களின் வாழ்வியலோடு ஒன்றித்துவிட்டமை சிறப்பான அம்சமாகும். தற்காலத்தில் விருத்தியுற்றிருக்கின்ற அறிவியற் சிந்தனைகளின் ஊற்றுக்கள் பலவும் இந்துசமய இலக்கியங்களில் காணப்படுகின்றன. அறிவியலின் அதியுன்னத வளர்ச்சியும், தொழிநுட்ப சாதனங்களின் அதிகரித்த பாவனைகளும் மனித இனத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச்செல்கின்றன எனக் கூறப்பட்டாலும் அவை வாழ்வின் இருப்புக்கும் மேம்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக அல்லது சவால்களாகவே உள்ளன. நிலையான அபிவிருத்தி என்ற தோரணையில் பல கைங்கரியங்கள் பொதுநல நோக்கில் அல்லது சிலரின் சுயநல அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டாலும் விழுமியங்களற்ற, உடலுள ரீதியாக நோயுற்றிருக்கின்ற, பிரித்தாளும் செயற்பாங்குகளான முரண்பாடு, போட்டி முதலியன வாழ்வாகிவிட்ட சமூகத்தில் அவை எத்துணை பொருத்தப்பாடுடையதாக அமையும்?

பழைமைகளை இழந்துவிட்டு புதுமைகளைத் தேடி புதுமனிதர்களாக வாழ்வதற்கு ஒவ்வொரு மனிதனும் முயற்சித்துக் கொண்டிருக்கின்றான். சமயங்கள் மனித வாழ்வினை செப்பனிடுவதற்காகவே தோன்றின. சமயம் என்பது சமூகத்தின் தேவைகளின் அடியாகச் சமூகத்திலிருந்தும் தோன்றியது என்கிறார் எமில் துர்க்கைம். ஆனால் சமயத்தையும் மனிதன் கேள்விப் பொருளாக்கிவிட்டான் என்றே நினைக்கத் தோன்றுகிறது. ஆனாலும் மனமும் உடலும் அமைதியற்று, நிம்மதியிழந்து, களைப்படைந்து, நோயுற்றுத் துன்பமடைகின்ற காலத்தில் சமயங்கள் காட்டிய பாதைகளைத் தேடும் மனிதர்களாக மாற்றமடைகின்ற துன்பமான சூழலையும் அவதானிக்க முடிகின்றது.

உண்மையில் இந்துசமயப் புலத்தில் தோன்றி வாழ்ந்து வாழ்வினுடைய அர்த்தங்களை அறிந்து கொண்ட முனிவர்கள், ஞானிகள், சித்தர்கள், நாயன்மார்கள் என்போர் உடலுள மேம்பாட்டிற்கான உபாயங்களை அன்றைய காலத்திலேயே இன்றைய அறிவியலாளர்கள் கண்டு வியக்கும் வகையில் வகுத்திருக்கிறார்கள். அவ்வாறு வகுக்கப்பட்டவற்றில் இன்று உலகளவில் பிரபலமும் முக்கியத்துவமும் பெற்றிருக்கின்ற யோகாவும் ஒன்றாகும்.

யோகாவை உடல் பயிற்சி சார்ந்த ஒன்றாகச் சிலர் இனங்காண்கின்றனர். வேறு சிலர், ஆன்மிக சக்தியை விருத்தி செய்வதற்கும், வாழ்வின் குறியிலக்கினை அடைவதற்குமான வழியாகக் கருதுகின்றனர். இன்னும் சிலர் வேறுபட்ட வடிவங்களில் அதனை அணுகுகின்றனர். எவ்வாறாயினும் யோகத்தின் முதற்படி சுயகட்டுப்பாடு (இயமம்) ஆகும். அது அகிம்சை, உண்மை, நேஉமை, பால்சார்ந்த இச்சைகளைக் கட்டுப்படுத்துதல், மற்றும் உடைமைத் தனமின்மை என்கின்ற ஐந்து உறுதி மொழிகளை தன்னுள் கொண்டுள்ளதாகும். இவ்வைந்து உறுதிமொழிகளும் ஒரு மகா விரதத்தை அளிக்கின்றது. அது சமுதாயப் பிரிவு, இடம், காலம் என்பவற்றைக் கருதாமல் ஞானத்தின் பலநிலைகளைக் கடந்து நீட்சியடைகின்றதாகும்.

யோகாவைப் பொறுத்த வரை எல்லாமும் சாதனமாகி விடும். யோகாவின் குறிக்கோள் அதனை அப்பியாசம் செய்பவர்களை விழிப்புணர்வு உடையவ ராக்குவதேயாகும். உள்ளத்தால் ஏற்படும் இவ்வுணர்வு உடலையும் மாற்றத்திற்கு உட்படுத்துகிறது. உடலும் மனமும் மாற்றத்திற்கு உள்ளாகின்ற போது பூரண மனிதனாக அவனும் மாற்றமடைகிறான். இம்மாற்றம் அறியாமையைக் களைவதனால் மட்டுமே ஏற்படுகிறது. தடுமாற்றமில்லாத பயிற்சியின் மூலம் எது உண்மை எது மாயை என்பதைப் பிரித்தறிவதால் அறியாமை சிதறடிக்கப்பட்டுவிடும் என்கிறார் ஓஷோ. விவேகத்தை இடைவிடாது பயில்வதே அறியாமையை ஒழிப்பதற்கான வழியாகும் என்பது பதஞ்சலி முனிவரின் சிந்தனை. இந்த விவேகமானது யோக அப்பியாசத்தினால் பெற்றுக்கொள்ளக் கூடியது. அறியாமை அகன்று, மனமாசு நீங்கி, உள்ளம் தூய்மையடைந்த நிலையில் புதிய சிந்தனையுருவாக்கத்திற்கும் செயலூக்கத்திற்கும் யோக அப்பியாசங்கள் வழிசமைக்கும்.

உலகத்திலே அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்கு ஒரு வழிகாட்டியாக இருப்பது ஹத யோகா ஆகும். ஏனெனில் உலக சமாதானமானது ஒவ்வொரு தனிமனிதனுள்ளும் நிலவும் சமாதானத்திலேயே தங்கியுள்ளது. அதாவது ஒவ்வொருவரும் தத்தமது உள்ளத்தில் சூழ்ந்திருக்கும் இருளாகிய கோபம், வெறுப்பு, அவா, நிலையற்ற பொருட்களின் மீதான பேராசை, மற்றும் அறியாமை என்பவற்றை அகற்றினாலன்றி உலகத்திலே சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் எதுவுமே வெற்றியளிக்கப்படமாட்டா. இவ்விருளை யோக அப்பியாசம் செய்வதன் மூலமே நீக்கலாம் என்பர் பெரியோர்.

மனம் மற்றும் உடல் நலத்தைப் பராமரித்துப் பேணுவதற்கான அல்லது திடமாகத் தக்க வைத்திருப்பதற்கான தேர்ந்த திறனாகவும், உபாயமாகவும் யோகம் உள்ளது. அத்துடன் மனதிற்கும் உடலிற்கும் இடையிலான உறவுகளினுடைய ஆழமான அறிவு, அடிப்படையான பயிற்சி ஆகியனவற்றைப் பெறுவதற்கான மனோ உடலியல் முறைமை சார்ந்த ஒன்றாகவும் இது உள்ளது. யோக மகரிஷி கோபாலானந்தர்,

முறையான பயிற்சி

முறையாக உடலைத் தளஊத்துதல்

முறையான மூச்சுப் பயிற்சி

முறையான உணவு

நல்ல சிந்தனையும் தியானமும்

என்றவாறு யோக தத்துவத்தினை ஐந்து பிரிவுகளாக விளக்குகின்றார். இதன்படி யோகத்தில் முறையான பயிற்சி அவசியம். இத்கைய பயிற்சியினை நல்ல குருவிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன் பின் குருவின்றி அப்பியாசம் செய்வதனை வழக்கமாக்கிக் கொள்ளலாம். இங்கு அப்பியாசம் குலவிருது, அப்பியாச வித்தைக்கு அழிவில்லை என்ற முதியோர் உரைகள் நினைவில் கொள்ளத்தக்கன.

யோகா தன்னை உணரவைக்கும் கலை. ஒரு மனிதனை நோயிலிருந்து முழுவதுமாக குணமடையச் செய்து முழுமைத்துவம் உடையவனாக ஆக்கும் அற்புதக் கருவி சாதனமே யோகம், என்ற நிலையில் யோகாவின் சாதனைகளும் முக்கியத்துவமும் இன்று உணரப்படுகின்றது. யோகாவைப் பற்றி முன்னெப்போதும் இல்லாத வகையில் தற்போது விழிப்புணர்வு மக்களிடையே அமைதியாக அதேவேளை மிக வேகமாக பரவிவருகிறது. அதன் முக்கியத்துவம் இந்து சமய, தத்துவ நிலைகள் கடந்து உலகம் தழுவிய நிலையில் உணரப்படுகின்றது. இந்த உணர்திறனை மென்மேலும் அழுத்தம் பெறச் செய்வதில் ஐக்கிய நாடுகள் சபையின் வகிபங்கு இருபத்தோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தலையாய பணியாக அமைந்திருக்கின்றது.

வருடத்திலுள்ள ஒவ்வொரு நாட்களையும் நைமித்ய (விசேட) நாட்களாக உலகம் நினைவு கூர்ந்து வருகின்றது. இந்த விஷேட நாட்கள் அவற்றைப் பேணுவதன் முக்கியத்துவத்தினையும் வலியுறுத்தி நிற்கின்றது. இதன் புரிதல்களும், ஞாபகப்படுத்தல்களும் ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதற்கான முயற்சிகளாகவே அமைகின்றன. இதற்கு உடலாகிய புறமும், மனமாகிய அகமும் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். மனம் வலுவுற்று உடல் வலுவற்று, மாறாக மனம் வலுவற்று உடல் வலுவுற்றுக் காணப்பட்டால் அது ஆரோக்கியமான வாழ்வுக்கு உகந்தது அல்ல. இந்த அவசியத்தை உணர்ந்து கொண்ட உலகம், உடலுள நல மேம்பாட்டுப் பேணலுக்கு ஒரு வழியைத் தேடியது. அவ்வழியினூடாக விழிப்புணர்வினை ஏற்படுத்தி ஆரோக்கியமான சூழலை தோற்றுவிக்க முனைந்தது. அதுவே யூன் 21ம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச யோகா தினமாகும். இது காலம் தாழ்த்திய கண்டுபிடிப்பு. ஆனாலும் அவசியமானதொன்றாகும்.

"யோகா" என்ற சொல் சமகாலத்தில் உலகம் முழுவதும் உச்சரிக்கப்படும் ஒன்றாக அமைந்திருக்கின்றது. குறிப்பாக மேற்குலக நாடுகளில் இது புகழ் பெற்ற கலாசாரத்தின் ஒருபகுதியாகக் காணப்படுகிறது. இன்று உலகில் சுயபயிற்சி பெற்ற

யோகிகளும், அதற்கான நிறுவனங்களும் யோகப் பயிற்சியினை முன்னெடுத்து வருகின்றன. இளைய சமுதாயத்தினரிடையே காணப்படுகின்ற மன அழுத்தங்கள், உளைச்சல்கள், பழிவாங்கும் எண்ணங்கள், விட்டுக்கொடுப்பற்ற தன்மைகள், புரிதலின்மைகள், வன்முறைகள், முறையற்ற பாலியல் நடத்தைகள் முதலிய சமூகப் பிறழ்வுகளில் இருந்து நீக்கி ஆரோக்கியமான உடலமைப்பையும், உளநலத்தையும் மேம்படுத்துவதற்கு யோகாவைச் சாதனமாக்கியுள்ளனர்.

யோகாவை சர்வதேச தினமாக பிரகடனப்படுத்தும் யோசனையானது 2014ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 27ம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியினால் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் ஆற்றிய உரையின் போது விடுக்கப்பட்டிருந்தது. அதன்படி யோகாவை சர்வதேச தினமாக பிரகடனம் செய்யும் தீர்மானம் 2014ஆம் ஆண்டு மார்கழி மாதம் 11ஆம் திகதி ஐக்கிய நாடுகளுக்கான பொதுச்சபையில் அதன் இந்தியத் தூதுவரால் முன்மொழியப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் ஐ.நாவின் இணை அனுசரணையாளர்களான 193 உறுப்பு நாடுகளில் 178 நாடுகள் இணைந்து கொண்டன. இவற்றுள் இஸ்லாமிய நாடுகளும் உள்ளடங்குகின்றன என்பது சிறப்பம்சம்.

ஐ.நாவில் முன்வைக்கப்படும் பொதுவான விடயம் தொடர்பான தீர்மானத்தை 90 நாட்களுக்குள் ஏற்றுக்கொண்டு அமுல்படுத்த அந்நாடுகள் இணங்கியிருப்பதும் இதுவே முதற்தடவை எனவும் கூறப்படுகின்றது. இந்நிகழ்வுகள் யாவும் யோகாவின் சர்வதேச தரத்தையும், முக்கியத்துவத்தையும், இன்றைய சூழலில் அதன் அவசியத்தையும் உணர்த்துவதாகவே உள்ளது. அத்துடன் யோகா தொடர்பான நம்பிக்கையையும் வெளிப்படுத்தியிருக்கின்றது.

மேற்படி தீர்மானமானது, யோகா அப்பியாசங்களை மேற்கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய அனுகூலங்களையும், உடலுள ஆரோக்கியத்துக்கும், நலனுக்கும், தூய்மைக்கும்புனிதமான அணுகுமுறையை யோகா தருகின்றது என்ற புரிதலையும் அங்கீகாரத்தையும் பரந்தளவில் வெளிப்படுத்துவதாக உள்ளது. ஆகவே, உலகில் உயர்ந்த சபையாக விளங்கக் கூடிய ஐக்கிய நாடுகள் சபையில் யோகாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்திப் பேசி, அனைத்து நாடுகளின் முழுமையான அங்கீகாரத்தைப் பெற்று, யோகாவினை சர்வதேச தினமாக நடைமுறையில் சாத்தியமாக்கிக் காட்டிய இந்தியப் பிரதமர் என்றென்றும் போற்றுதலுக்குரியவர் ஆவார்.

2015ஆம் ஆண்டு உலகத்திலுள்ள அனைத்துப் பாகங்களிலும் முதலாவது சர்வதேச யோகாதினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. உலகத்திலுள்ள 191 நாடுகளில் சுமார் 252 நகரங்களில் யோகா தினம் கொண்டாடப்பட்டதாக அறிய முடிகின்றது. இந்தியாவில் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், சமயப் பெரியவர்கள்,

அரசியல் வாதிகள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் இராணுவ வீரர்கள் எனப்பலரும் இதில் கலந்துகொண்டனர். அமெரிக்காவில் உள்ள ஐ.நாவின் தலைமையகத்தில் சர்வதேச யோகாதினம் கடைப்பிடிக்கப்பட்டது. ஐ.நாவின் செயலாளர் பான் கீ மூன் உலகம் முழுவதும் யோகா தினம் கொண்டாடப்பட்டமை மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது..

இலங்கையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் சுமார் ஐயாயிரம் மாணவர்களும், காலிமுகத்திடலில் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோரும் ஒன்றுகூடி யோக அப்பியாசத்தை மேற்கொண்டிருந்தமை சிறப்பான அம்சமாக இருந்தது. இவ்வாறு இலங்கையில் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்ற யோகா நிகழ்விற்குரிய செய்முறை விளக்கங்களை இந்திய கலாசார நிலையம், ஸ்கை கொன்சியஸ்நெஸ் அமைப்பு, பிரம்ம குமாரிகள் ராஜயோக அமைப்பு, ஓம் ஸ்பேஸ் அமைப்பு, வாழும் கலை அமைப்பு, செத் செத யோகா அமைப்பு முதலியன வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் ஒரே நேரத்தில் பத்தாயிரம் மாணவர்களை ஒன்று சேர்த்து சர்வதேச யோகாதினத்தை யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதுவராலயம் செய்துமுடித்திருகின்றது. போருக்குப் பிந்தியதான சூழலில் இளம் சமூகத்தவர்களின் நடத்தைகளில் அதிகளவான மாற்றங்களை அவதானிக்க முடிகின்றது. இவர்களின் தவறான பயணங்களை தடுக்கவும், மனித நேயத்தைக் கட்டியெழுப்பவும், அனைவரையும் ஒன்றுசேர்த்து சமாதான வாழ்வியலுக்கான சூழலை விரிவுபடுத்தவும், உடலுள ரீதியாக ஆரோக்கியத்தை வளர்க்கவும், வேண்டத்தகாத உணவுகள், குடிபானங்கள், போதைப் பொருட்பாவனைகள், முறையற்ற உறவுகள் முதலியனவற்றிலிருந்து மீட்டெடுக்கவும், அமைதியானதும் மகிழ்வானதும் நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடியதுமான வாழ்வினை உருவாக்கவும் இத்தகைய நிகழ்வுகளும், விழிப்புணர்வுகளும் பயன்பாடுடையனவாக அமையும்.

யாழ்ப்பாணத்தில் யோகப் பயிற்சியானது பாடசாலைகள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுடாக வழங்கப்பட்டு வருகின்றது. நல்லூர் நாவலர் மணிமண்டபம், நல்லூர் அறுபத்து மூன்று நாயன்மார் மடம், நல்லை ஆதீனம், வேதாந்த மடம், சின்மய மிஷன் முதலிய இடங்களில் தினமும் யோகப் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது. ஆரம்பத்தில் குறைந்தளவானோர் பயிற்சி பெற்றனராயினும், அண்மைக்காலங்களில் இவ்வெண்ணிக்கையில் அதிகளவான மாற்றம் ஏற்பட்டுள்ளமையினையும் அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையினர் நடாத்திய முதலாவது அனைத்துலகச் சைவ மாநாட்டின் இறுதிநாள் கலை நிகழ்வில் யோகாவினை காட்சிப் படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. யாழ் யோக

அரங்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இதனை அளிக்கை செய்து அனைவரினதும் பாராட்டினைப் பெற்றிருந்தனர்.

ஆகவே. யோகாவினை உளவியல் நோக்கில், சித்த மருத்துவ நோக்கில், ஆன்மீக நோக்கில் என்ற பன்முக வடிவத்தில் நோக்குவது சிறப்பாகும். உளவியலை "விஞ்ஞானத்தின் விஞ்ஞானம்" (Science of Science) என்கிறார் விவேகானந்தர். உளவியல் தனியான துறையாக வளர்ச்சி காண்பதற்கு முன்னரே யோகாவானது உளம் பற்றிய ஆய்வியலாக இருந்துவந்திருக்கிறது. மேலைத்தேயத்தவர்கள் யோகாவைப் பற்றி ஏராளமான விடயங்களை அறிந்திருப்பதுடன் பின்பற்றியும் வருகின்றனர். பிரித்தானியாவில் அதிக வயதுவரை வாழ்ந்தவர்களில் ஒருவரான (110 வயது) Charles Henry Arnold என்பவர்

"நான் முதுமையினால் பலவீனமடைந்த பயனற்ற ஒருவன் என்பதனை ஒத்துக்கொள்ள மாட்டேன். இதுவரை நான் மிகவும் சுறுசுறுப்பாகவும் அதேவேளை எனது மூளை சாதாரணமாக தொழிற்படக் கூடியதாகவும் உள்ளது. பொதுவாக எனது உடல் மிகவும் நன்றாக உள்ளது. யோகப் பயிற்சியினாலும் தியானத்தினாலும் விளையும் நன்மைகளை எடுத்துக்காட்டும் ஒரு வாழும் உதாரணமாகவே நான் இருக்கிறேன். யோகா சிந்திக்கும் திறனையும், மன ஒருமையையும் இணைக்கின்ற ஒரு சக்தியாகும். என்னுடைய நீண்ட ஆயுளுக்கு காரணம் கற்பிப்பதாக யோகாவே அமைகிறது."

என்று குறிப்பிட்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

முதியவர்கள் தமது முதுமைக் காலங்களில் உடல், உள நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். நோய்கள் இலகுவாக அவர்களை ஆட்கொண்டு விடுகின்றது. மன உளைச்சல், ஞாபகமின்மை, நித்திரையின்மை, உடற் பலவீனம், தள்ளாடும் நடை, தளர்ந்த பேச்சு, எலும்பு முறிவு போன்ற உபாதைகளால் பாதிக்கப்படுகின்றனர். முதுமைக் காலங்களில் ஆரோக்கியத்துடனும் மனமகிழ்வுடனும் வாழ்வதற்கு எளிமையான யோகப் பயிற்சிகள் உதவுகின்றன. இவர்கள் நாளாந்தம் தங்களால் செய்யக்கூடிய பயிற்சிகளை கிரமமாகச் செய்து வந்தால் உடலுள ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும். இதனால் முதுமையில் தோன்றும் ஏக்கம், மனக்கவலை, மன உளைச்சல், உடற்சோர்வு முதலியன நீங்கி மகிழ்வுடன் வாழ்வர். தொடர்ச்சியான பயிற்சிகளால் மனோதிடம் அதிகரித்து வாழ்விலேற்படும் பன்முகமான சவால்களை எதிர்கொள்ளும் பக்குவ நிலை உருவாகும்.

இவ்வாறாக இந்தயோகப் பயிற்சியினால் எண்ணிறைந்த நன்மைகளுண்டு. யோகப் பயிற்சியினை சிறுவயது முதற்கொண்டு முறையாகப் பயில்பவர்கள் வளமான உடலையும், நலமான உணர்வையும், கூரிய அறிவையும், பொலிவான தோற்றத்தையும், ஞாபக சக்தியையும் உடையவர்களாக விளங்குவர். பெற்றோர்கள் தங்கள் மரபணுக்களில் உள்ள குறைகள் நீங்கப்பெற்று ஆரோக்கியமான

பலசாலிகளான பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ள இயலும். பரம்பரை பரம்பரையாகத் தாக்கும் சில நோய்களைத் தவிர்க்க முடியும். மரபணுச் சீர்குலைவுகளைச் சீர்படுத்த இயலும். புற்றுநோய், இதயநோய், ஆஸ்துமா, மலட்டுத் தன்மை, மூட்டுவாதம், நரம்பு மண்டல நோய்கள் போன்ற நோய்களுக்குரிய நிவாரணியாகவும் இதனைப் பயன்படுத்த முடியும். ஊனச்சதைகள் பற்றிக் கொள்ளாதிருப்பதனால் உறுதியான உடலமைப்பைப் பெறமுடியும். அகச்சுரப்பிகளின் செயற்பாடுகளும், நரம்பு மண்டலச் செயற்பாடுகளும் சீராக இடம்பெறவும் ஏதுவாகின்றது.

இழந்த உடல் நலத்தை மீளப்பெறவும், உறுதியான மனோநிலையினை கையகப் படுத்தவும், ஆன்மாவிடத்தே மறைந்திருக்கும் சக்தியை உணரச்செய்யவும், ஆன்மாக்களிடத்தே தெய்வீகத் தன்மை வாய்ந்த இயல்புகளை வெளிவரச் செய்யவும், மனோதிடத்தை செழுமையாக்கவும், இராஜயோகத்தின் இருப்பிடத்தை நோக்கிச் செல்வதற்கும் யோக அப்பியாசம் துணைபுரிகின்றது. ஆகவே, உடற் தூய்மை, உளத்தூய்மை, பேச்சுத்தூய்மை. மன அமைதி, நல்லெண்ணம், நற்புத்தி, நற்செயல் என்பன யோகத்தினால் உண்டாவன. இப்பண்புகள் ஒரு சமூகத்தில் இருந்தால் சமூகத்தின் வளர்ச்சி அபரிமிதமாகும். மாறாக பாலியல் வன்முறைகள், ஒழுங்கற்ற வாழ்வியல், போதைப்பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம் என்ற வகையில் காணப்படுகின்ற சமூகச் சீரழிவுகள் எமது பண்பாட்டுச் சீரழிவில் பங்கெடுக்கின்றன. இது உலகளவிலும் பாரிய அச்சுறுத்தலைக் கொடுக்கின்றன. இவ்வாறானதொரு அசாதாரண சூழற்புலத்தில் சர்வதேசம் கண்டுபிடித்திருக்கின்ற ஒரு அற்புதமான மருந்தே "யோக கலை" என்பது. இன்று சர்வதேசம் இதனை உணர்ந்து யோகாவை உலக சமாதானத்துக்கும், அமைதிக்கும் ஆற்றுப்படுத்தும் கருவியாக அடையாளப்படுத்தி யிருப்பினும் நம்முன்னோர்கள் என்றோ இதுபற்றி சிந்தித்து விட்டார்கள் என்றே கொள்ளவேண்டும்.


யோகாவினை இயக்கமாக்க வேண்டும் என நரேந்திர மோடி அண்மையில் கருத்துத் தெரிவித்திருக்கின்றார். வாழுகின்ற சமூகத்தில் மாற்றங்கள் வேண்டும் என்கின்ற தன்னுணர்ச்சிப் போக்கினை இயக்கங்கள் ஏற்படுத்தவல்லன. பல்லவர் கால பக்தி இயக்கம் பிற்கால இயக்கங்கள் பலவற்றுக்கும் முன்வழிகாட்டியாக செயற்பட்டிருந்தது. அது தென்னிந்தியாவை மையப்படுத்தியிருந்தது. ஆனால் யோக இயக்கம் உலகளாவிய நோக்கில் செயற்படுமாக இருந்தால் அமைதியும், சமாதானமும், நல்லிணக்கமும் ஏற்பட வழிவகுக்கும். அவ்வாறு யோகா ஒரு இயக்கமாகச் செயற்படுமிடத்து அதன் விளைவுகள் யாவும் ஆரோக்கியமான சமூக உருவாக்கத்தை ஏற்படுத்துமென்பது நம்பிக்கை யாகவுள்ளது.

யோகக் கலையில் ஆசனம் முதன்மை பெறுகின்றது. ஆசனம் என்பது இருக்கை, அமர்தல் என்று பொருள்படுகின்றது. இருக்க இருக்க இருக்கை தெளியும்

என்பர். இதனை அசைவற்ற சலனம் என்கிறார் சான்டர் எலியட். ஆகவே, யோகம் என்பதனை செயலில் உன்னத கவனம் (attention in action) என்று பொருள் கொள்ளும் போது ஆசனப் பயிற்சி என்பது அவ்வனுபவத்தின் தொடக்க நிலையே எனலாம். ஆசனம் என்பது மனதை அலைபாய விடாமல் ஒருமுகப்படுத்தச் செய்வதற்கான நிலையாகக் கருதப்பட்டது. பின்னர் தியானத்துக்கான உட்கார்ந்த நிலை, இருந்த நிலை மட்டுமல்லாமல் முதுகு கீழ்ப்படிய படுத்துச் செய்தல், தலைகீழ் செய்தல், நின்று செய்தல், நிமிந்துபடுத்துச் செய்தல் எனப்பல தளத்தில் இவ்வாசனப் பயிற்சிகள் விரிந்தன. சூரிய நமஸ்காரமும் சாந்தி ஆசனமும் இவ்வாசனப் பயிற்சியின் தொடக்கமும் முடிவுமாக உள்ளது.


**நிறைவாக :** இன்றைய அறிவியல் உலகில் நிகழ்த்தப்படுகின்ற ஆராய்சிகளுக்கு அப்பாற்பட்டு விளங்குகின்ற யோகாவானது மனித நலவிருத்தியை மேம்படுத்துவதற்கான வழியாகவே காணப்படுகின்றது. யோகாவின் முக்கியத்துவம் அதனை உலக அரங்கில் நிலைநிறுத்தியுள்ளது. சர்வதேச யோகா நாளில் மட்டும் இதனை அப்பியாசப்படுத்தாமல் எமது வாழ்நாளில் சிலமணித்துளிகளை இதற்காக ஒதுக்கி தினமும் அப்பியாசம் செய்ய முன்வரவேண்டும். கண்கெட்டுப் போனபின் சூரிய நமஸ்காரம் அவசியமற்றது. அவற்றின் முக்கியத்துவத்தினை நாமும் உணர்ந்து ஏனையோர்க்கும் உணர்த்த வேண்டும். இவ்வுணர்வும் பின்பற்றுதல்களும் நல்வாழ்வுக்கு வழிசமைக்கும். ஆகவே எதிர்கால வாழ்வின் பெறுமதிவாய்ந்த முதலீடாக யோகா அமைகின்றதென்பது புலனாகின்றது.

## நல்லூர் பெருந்திருவிழா ஆரம்பம்



# பன்னிரு திருமுறைப் பூர்த்தி வைபவம்
# 20-07-2018 வெள்ளிக்கிழமை










# பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது நிர்வாக சபையின் நீண்டகால உறுப்பினரும் தற்போது நிர்வாகச் செயலாளராகப் பணியாற்றிவரும்

**திரு. நாகலிங்கம் தவநாதன் அவர்கள்**

( இளைப்பாறிய மாவட்ட கூட்டுறவு அதிகாரி )

08-07-2018 இல் அகவை எழுபத்தைந்தை நிறைவு செய்துள்ளமையை முன்னிட்டு அவர் பணிகள் மேலும் தொடர, உடல் உள ஆரோக்கியத்துடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**நிர்வாக சபை**

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

# சிவானந்தநிலை பெற்ற அணைந்தோர்

திருமுறைநெறிச்செல்வர், சித்தாந்த ரத்தினம்,
சிவஞானச்சுடர் **கேசினி கோணேஸ்வரன்**

உடம்புடன் கூடியிருக்கும்போதே இறைவனின் திருவடியை அணைந்து சிவானந்தத்தை அனுபவிப்போர் அணைந்தோர் எனப்படுவர். இவர்கள் இவ்வுலகத்தில் வாழ்ந்தபோதும் உலக நினைவின்றிச் சிவத்தில் அமுந்தி, சிவானந்தத்தில் திளைத்திருப்பர். இந்நிலையை "தூங்காமல் தூங்குதல்" என பெரியோர்கள் கூறுவார்கள். தம்மையும் உலகையும் மறந்திருத்தலால் தூங்குதலும், சிவத்தை உணர்ந்து சிவானந்தத்தை அனுபவிப்பதால் விழித்திருத்தலும் என்ற இருநிலைகளும் ஒருங்கே நிகழ்வதால், இவ்வாறு கூறுகின்றனர். இவ்வுலகில் சீவிக்கும்போதே முத்திநிலை பெற்றவர் என்ற கருத்தில் சீவன் முத்தர் எனவும் கூறுவர்.

சைவசித்தாந்த நூல்கள் பலவற்றிலும், திருமுறைகளிலும் அணைந்தோர் தன்மை பற்றி தெளிவாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டுள்ளது. அணைந்தோர்க்கு பிராரத்த வினை காரணமாக இன்பம் விளையிலும், துன்பம் நேரினும், தாமரையிலையில் தண்ணீர் போல அவற்றில் சிறிதும் பற்றின்றி இறைவன் திருவடியையே பற்றி நிற்பார். இதனையே சேக்கிழார் "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர் ஓம் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்" என்று கூறுகிறார். திருநாவுக்கரசு நாயனாரின் "நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம் நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம் ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம் இன்பமே யெந்நாளும் துன்பமில்லை" என்ற தேவாரமும் சிவனின் திருவடியை பற்றி நிற்பவர்களின் நிலை பற்றி கூறுகிறது.

அணைந்தோரது அறிவும், இச்சையும், செயலும் சிவனின் திருவடியிலேயே அமுந்தியிருக்கும் மலவாசனை காரணமாக அவை உலக விடயத்துக்கு செல்லும் போதெல்லாம் அவர்கள் திருக்கோவிலுக்கு சென்று வணங்குதல், சிவனடியார்களை வணங்குதல், திருவைந்தெழுத்து ஓதுதல் போன்றவற்றை செய்து மீண்டும் அவற்றை சிவனின் திருவடியில் அமுந்த வைப்பர். இதனை உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த பின்வரும் திருவருட்பயன் பாடல் விளக்குகிறது.

"புலன் அடக்கித் தம்முதற்கட் புக்குறுவார் போதார்
தலம்நடக்கும் ஆமை தக" – திருவருட்பயன் (94)

ஆமை தனக்கு துன்பம் நேர போகிறது என உணர்ந்தால், தன் உறுப்புகளை ஓட்டின் உள்ளே இழுத்து அசைவற்றுக்கிடப்பது போல, அணைந்தோர் மலவாசனை காரணமாக உலகப்பற்றுக்கள் தாக்கும் என உணர்ந்தால், புலன்களை அடக்கி சிவனின் வியாபகத்துள் ஒடுங்கி இருப்பர்.

திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் அருளிச்செய்த திருவுந்தியார் என்ற நூலில் 16வது பாடலும் இதே கருத்தை விளக்குகிறது.

“உழவா துணர்கின்ற யோகிகள் ஒன்றோடுத்
தழுவாது நிற்பரென் றுந்தீபற
தாழ்ந்த மணிநாப்போ லுந்தீபற”.

திருவருளையே உணர்ந்து அனுபவிக்கும் சிவயோகிகள், உலகத்தவர் போல ஒழுகினர் ஆயினும், ஒன்றையும் தம் செயலாகக் கொண்டு ஒழுகாமல் எல்லாவற்றையும் சிவன் செயலாகவே நினைந்து ஒழுகுவார்கள். அதனால் தரையில் வைக்கப்பட்ட மணியின் நாக்குப்போல அவர்களின் உயிர் அறிவும் செயலற்றுக் கிடக்கும்.

“அறிவறிவாய் நிற்கில் அறிவுபல வாமென்(று)
அறிவின் அறிவவிழ்த்துக் கொண்டவ் – அறிவினராய்
வாழ்ந்திருப்பர் நீத்தோர்கள் மானுடரின் மாணவகா
தாழ்ந்தமணி நாவேபோல் தான்”.

என்ற திருக்களிற்றுப்படியார் பாடலும் (32) இதே கருத்தையே வலியுறுத்துகிறது.

அணைந்தோர் சிவனின் திருவடியில் சிவானந்தத்தில் திளைக்கமட்டுமே விரும்புவர். “கொள்ளேன் புரந்தரன் மால் அயன் வாழ்வு”, "வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும்", "போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தராதி இன்பமும்” போன்ற திருவாசகப்பாடல் வரிகளில் மணிவாசகர் இந்நிலையை குறிப்பிட்டுள்ளார்.

அணைந்தோரில் மூவகைக் கன்மங்களும் எவ்வகையில் தொழிற்படுகின்றது என்பதனை சிவப்பிரகாசம் 93ம் பாடல் விளக்குகிறது. இப்பிறப்பில் நுகரவேண்டிய பிராரத்த வினைகள், இவ்வுடம்பு உள்ளவரை அவரால் பற்றின்றி நுகரப்பட்டு, உடம்பு நீங்கும்போது, வினையும் முடிந்து ஒழியும். சஞ்சிதவினை ஞான குருவின் நிர்வாண தீட்சையின் காரணமாக அவருடைய அருட்பார்வையால் எரிக்கப்பட்டு நீறாகிவிடும். பிராரத்த வினையை பற்றின்றி அனுபவித்தால் ஆகாமியம் தோன்றுவதற்கு வாய்ப்பில்லை. எப்போதாவது சோர்வு காரணமாக விருப்பு, வெறுப்பு தோன்றி, அது ஆகாமியமானால் திருவருளே அவ்வினையைச் சுட்டு எரித்துவிடும். இவ்வகையாக அணைந்தோர்க்கு மூவகை வினைகளும் ஒழிவதால், ஏகனாகி இறைபணி நின்று சிவானந்தத்தை அனுபவிப்பர். இணையடிகளை உணரும் போதெல்லாம் இன்பம் புதிது புதிதாய் மேன்மேலும் அதிகரித்தலால் முதல்வன் “போகமாய் விளைந்த பொற்பினான்” எனச் சிறப்பிக்கப்படுகிறான்.

அணைந்தோர் நிட்டைக்கு யோக்கியமாகக் கருதப்படும் புண்ணியத் தலங்களின் தரிசனமும், இன்ன காலத்தில் இது செய்யவேண்டும் என்ற கால சங்கற்பமும், இன்ன திக்கு நன்று, இன்ன திக்கு தீது என்ற திக்கு கற்பனையும், பத்மாசனம் முதலான ஆசனங்களில் இருக்கவேண்டும் என்ற நியமமும், சமயக் கோட்பாடும், வேடம், ரூபம், ஆசாரம் முதலியவற்றில் அபிமானமும், ஏனைய நியமங்களும் ஒழிந்து போகும். அணைந்தோர் சிவனடியார்களையும், சிவலிங்கம் முதலான திருமேனிகளையும் சிவமென்று கண்டு வணங்கி, கண்களில் ஆனந்த அருவி சொரிய நாத் தழுதழுப்ப உரை தடுமாற ஆனந்த வெள்ளத்துள் அமிழ்ந்து, சிவத்தையே தரிசித்திருப்பர். இந்நிலையை திருஞானசம்பந்தர் "காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி" எனவும், மாணிக்கவாசகர் "மெய்தானரும்பி விதிர் விதிர்த்து" எனவும் உணர்ந்து பாடியுள்ளனர்.

அகப்பூசை, புறப்பூசை என இருவித பூசை நிகழும் இவ்வுலகிலே, அகம், புறம் என பிரித்தறியாது, எங்கும் ஒரே தன்மையதாய் கண்டு, ஞானமே தமக்கு வடிவாய், சிவத்துடன் ஏகமாகி நின்று சிவானந்தத்தை அனுபவிப்பவர் என சிவப்பிரகாசம் 95ம் பாடலில் கூறப்பட்டுள்ளது. சிவானந்தநிலை என்பது முதல்வன் உடனாக நின்று அறிவிப்பதோடு தனக்காக அறிந்தும் வரும் பேருபகாரத்தை நினைந்து அவனிடத்தே அன்பு மேன்மேலும் கிளர்ந்து எழ, அவனோடு கலந்து அழுந்தி நிற்றல். இவ்வாறு அழுந்தி நிற்றலை மாணிக்கவாசக சுவாமிகள் திருவாக்கால் அறிந்து கொள்ளலாம்.

"அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய், யான் இதற்கு இலனோர் கைம்மாறு"

திருவாசகம் – கோயில் திருப்பதிகள் – 2

சிவானந்த நிலையில், முதல்வனின் பேருபகாரத்தை நினைந்து அன்புணர்வும் நன்றியுணர்வும் கொண்டு மனம்கசிந்து நிற்றல் முதலான அருள்நிலைகளை காணலாம்.

காரைக்காலம்மையார் எந்நேரமும் எவற்றிலும் சிவனையே காண்கிறார் என்பதனை பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

"காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு – மாலையின்
தாங்குருவே போலும் சடைக்கற்றை மற்றவர்க்கு
வீங்கிருளே போலும் மிடறு."

அற்புதத் திருவந்தாதி – 65

காலைப்பொழுது (உதிக்கும் சூரியனால் சிவந்து தோன்றுவதால்) சிவபெருமானின் செந்நிற மேனியாகவும், நண்பகற்பொழுது அவனது திருமேனியில் உள்ள வெண்ணீற்றின் ஒளியாவும், மாலைப்பொழுது அவனது செஞ்சடைக்கற்றை

களாகவும் இரவுப்பொழுது அவனது நீலநிறக் கழுத்தாகவும் வெளிப்பட்டுச் சிவானந்தம் விளைவித்துத் திகழ்வதை இத்திருப்பாட்டால் உணர்ந்து கொள்ளலாம்.

சமய குரவர்கள், அறுபத்து மூன்று நாயன்மார்கள், சித்தர்கள் போன்றோர் என்றும் அணைந்தோர் என்ற நிலையில் இருந்தவர்கள். திருஞானசம்பந்தர் என்பு நிறைந்த குடத்திலிருந்து எழுதவொண்ணா எழிலோடு திருமகளை போல எழுந்த பூம்பாவையில் சிவத்தையே கண்டார். அதிபத்த நாயனார் வறுமையில் வாடியபோதும், வலையில் அகப்பட்ட பொன் மீனை "சென்று சேர்க சிவன் கழலே" என்று கூறி கடலில் விட்டார். மெய்ப்பொருள் நாயனார் தன்னை வாளால் வெட்டியவனிலும் சிவத்தைக் கண்டு அன்பு பாராட்டிய நிலை வியக்கத்தக்கது. திருக்களிற்றுப்படியாரிலும், பெரியபுராணத்திலும் அடியார்களின் சிவானந்தநிலை பற்றி பல இடங்களிலும் காணலாம்.

அணைந்தோர் எந்நேரமும் சிவசிந்தனையில் அழுந்தி, சிவானந்த நிலையைத் தூய்த்துக்கொண்டிருப்பர் என்பதனை சிவஞானசித்தியாரின் பின்வரும் பாடல் விளக்குகின்றது.

"பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞானம் அஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானம் வைந்தவத்தின் கலக்கம்
தருஞானம் போகஞா திருஞான ஞேயம்
தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகும்
திருஞானம் இவையெலாங் கடந்தசிவ ஞானம்
ஆதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்"

எல்லாவிடத்திலும் சிவன் நிறைந்திருக்கிறான் எந்த இடமும் சிவனை நீங்கியில்லை. அவ்வாறே சிவமாம் தன்மை பெற்ற அணைந்தோரும் எங்கும் இருக்கிறார்கள். அதாவது சிவனை அணைந்தோர் உடம்பில் நின்றாராயினும், உடம்பளவில் நில்லார். சிவனைப் போல வியாபகம் உடையவர் எங்கும் நிற்பர். உடம்போடு உள்ள சீவன் முத்தி நிலையில், சீவகரணங்க்ள சிவ கரணங்களாக மாறி, அவர்க்கு வியாபக உணர்வையே தந்து நிற்கும். அவ்வியாபக உணர்வினால் எல்லாவற்றிலும் சிவத்தையே காண்பார். "எல்லாம் சிவனென நின்றாய் போற்றி" ஏ்னற அப்பர் சுவாமிகளின் திருத்தாண்டகமும் இதனையே குறிப்பிடுகின்றது.

சிவன் முதலே அன்றி முதலில்லை என்றும்
சிவனுடைய தென்னறிவ தென்றும் – சிவனவன(து)
என்செயல தாகின்ற தென்றும் இவையிற்றைத்

தன்செயலாக் கொள்ளாமை தான். (64)

என்ற திருக்களிற்றுப்படியார் பாடல் சிவனுடைய இச்சையின்றி நமக்கிச்சையில்லை யென்றும் சிவனுடைய அறிவன்றி நமக்கறிவில்லை என்றும் சிவனுடைய கிரியையன்றி நமக்குக் கிரியையில்லையென்றும் அணைந்தோர் நிலை பற்றி கூறுகின்றது.

அணைந்தோர் எந்நிலையிலும் சிவனை அறிவில் உணர்ந்தே நிற்பார். "வாழினும் சாவினும் வருந்தினும் போய் வீழினும் உன்கழல் விடுவேன் அல்லேன்" என்ற உறுதியோடு இருப்பர். பரமுத்தி அடைந்தோர் உடம்பு நீங்கிய பின் பெறும் இன்பத்தை, சிவானந்த நிலையை சீவன்முத்தர் உடம்போடு நின்றே பெறுகின்றனர். அந்நிலையில் திளைத்திருந்த மாணிக்கவாசக சுவாமிகள் பின்வருமாறு பாடுகின்றார்.

"இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றுந்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய் – அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து."

திருவாசகம் திருவெண்பா (11)

திருமூலர் தான் அனுபவித்த சிவானந்த நிலையை திருமந்திரத்தில் பின்வருமாறு பாடுகின்றார்.

"பணிந்து நின்றேன் பரமாதி பதியைத்
துணிந்து நின்றேன் இனி மற்று ஒன்றும் வேண்டேன்
அணிந் நின்றேன் உடல் ஆதிப் பிரானைத்
தணிந்து நின்றேன் சிவன் தன்மை கண்டேன்." (2972)

சிவந்த தாமரை மலர் போன்ற விளங்குபவையும், அடியார்களைத் தாங்கி நிற்கும் வல்லமை வாய்ந்தவையும் ஆன திருவடிகளை கணப்போதும் மறவாமல், சிவபெருமானிடத்தே அயரா அன்பு செய்தும், மெய்ஞ்ஞானியர்களின் திருவேடமாகிய திருநீறு, உருத்திராக்கம் ஆகியவற்றையும் சிவாலயத்தையும் சிவன் எனவே கண்டு வழிபட்டும் வருபவர் அணைந்தோர் என சிவஞானபோத பன்னிரண்டாம் சூத்திரம் கூறுகிறது. இந்நிலையை நாம் அடைவது எப்படி என்று திருநாவுக்கரசு நாயனார் கூறுகிறார்.

"மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி இட்டுச்
செம்மையுள் நிற்பர் ஆகில் சிவகதி விளையும் அன்றே".

# மூவரும் காணமுடியாதவனை மணிவாசகர் கண்டார்

பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன்

முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்
பந்து அணை விரலியும் நீயும் நின் அடியார்
பழம் குடில்தொறும் எழுந்தருளிய பரனே
செந் தழல் புரை திருமேனியும் காட்டி
திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்
ஆர் அமுதே பள்ளி எழுந்தருளாயே.

பந்தணை விரலி – பந்துகள் வந்து சாருகின்ற விரலினை உடைய உமாதேவி, பழங்குடில் – பழங்குடிசையாகிய உடம்பு.

இப்பாடலின் முதல் அடி "முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்" என்பது ஆகும். முக்கூட்டுப் பரிமாணமுடைய இந்தப் பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்னர் வெறும் காலத் தத்துவம் ஒன்றுமட்டுமே இருந்தது என்பதை அடிகளார் "ஞாலமே விசும்பே இவை வந்து போம் காலமே உனை என்றுகொல் காண்பதே" (திருவாச :47) என்று பாடுகின்றார். எனவே, பிரபஞ்சத் தோற்றம் இல்லாமல் வெறும் காலமாக இருக்கும்போது அக்காலத் தத்துவத்திறகுத் தோற்றம், இருப்பு, மறைவு என்ற நிலைகள் இல்லை. எனவே, அடிகளார் "முதல் நடு, இறுதியும் ஆனாய்" என்று குறிப்பிடுவது, இப்பிரபஞ்சத்தையும் அதனை ஊடுருவி இருக்கும் இறைவனையுமே ஆகும். இப்பிரபஞ்சம் ஒன்றிற்குத்தான் தோற்றம், நிலை, மறைவு என்ற மூன்றுநிலைகளும் உண்டு. இந்த மூன்றையும் கூறி "ஆனாய்" என்று குறிப்பிடுவது ஆழ்ந்து சிந்திக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

இறுதியுமானாய் என்பதில் உள்ள உம்மை "முற்றும்மை" என்று கொள்ளத் தேவையில்லை. இறுதியும் ஆனவன் என்றால் இறுதிக்கு அப்பாற்பட்ட ஒன்று இருப்பின், அதுவும் ஆனவன் என்ற பொருளையும் தந்து நிற்கும். "இறுதியும்" என்ற சொல்லால், தோற்றுவிக்கப்பட்ட பிரபஞ்சத்திற்குத்தான் இறுதி உண்டே தவிர, தோற்றுவித்தவனுக்கு இறுதி இல்லை என்பது பெற்றாம்.

இறுதி இல்லை என்று கூறவே, தோற்றம் இல்லை என்பது தானே பெறப்படும். தோற்றம், இறுதி என்ற இரண்டும் இல்லாவிடினும், இடையே உள்ள இருப்பு நிலை மட்டும் அப்பொருளுக்கு என்றும் உண்டு.

முதல் நடு இறுதி என்று கூறுவதற்கு முன்னர், முந்தி என்ற சொல்லை அடிகளார் பெய்துள்ளார். அனைத்திற்கும் இறுதி ஏற்பட்ட பிறகும், அதாவது அனைத்தையும் அழித்தபிறகும், தான் ஒருவனே எஞ்சியுள்ளான். ஆதலால் இவ்வனைத்தும் மீண்டும் தோன்றுவதற்கு முன்னரும் அவன் உள்ளான் என்பது பெறப்படுகின்றதன்றோ? இதனையே "முந்திய" என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்.

அடுத்து நிற்கும் "மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்" என்ற தொடராகும். பிரபஞ்சத்தை தோற்றுவித்து, காத்து, அழிக்கவேண்டும் எனின், அதற்குரிய கர்த்தாக்கள் மூவர் வேண்டும். பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரும் தங்கள் கடமைகளைச் செய்கிறார்களே அன்றி, தங்களை அக்கடமைகளைச் செய்ய ஏவிய ஏவுதல் கர்த்தார் யார் என்பதை அறிந்தார்கள் இல்லை என்கிறார்.

இப்பாடலில் வரும் மூவரும் என்ற சொல்லுக்கு பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்று பொருள் கொள்ள விரும்பாத சைவப் பெருமக்கள், மூவர் என்று வரும் பிற இடங்களில் இந்திரன், மால், அயன் என்று அடிகளாரே கூறுவதை எடுத்துக்காட்டுகின்றார்.

வேதத்தில் உருத்திரனுக்கு கொடுக்கப்பட்ட இடம் மிக மட்டமானதாகும். பிற்காலத்தார் இந்த உருத்திரனையும் மூலப் பொருளான சிவபெருமானையும் ஒருவரே என்று கருதி இடர்ப்படலாயினர். வேதத்தில் உரும் உருத்திரன் அழித்தல் தொழிலைச் செய்பவன். ஆயினும், எந்த யாகத்திலும் அவிஷ் பெறும் தகுதி உடையவனல்லன். அன்றியும் யாக பூமியில் சிதறும் பொருள்களையும், பலியிடப்படாமல் காயப்படுத்தப்பட்ட விலங்குகளையும் தனக்கென்று ஏற்றுக்கொள்ளும் தகுதிதான் ரிக் வேதத்தில் காணப்படும் உருத்திரனுக்கு உண்டு. ஆகவே, சிவனுக்கும் இவனுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இந்திரன் முதலானவருக்குக் கொடுக்கப்படும். அவி உணவில் உருத்திரனுக்குப் பங்கில்லை. "பசூநாம்பதி" (விலங்குகளுக்குத் தலைவன்) என்ற பட்டத்தை இருக்கு வேதம் உருத்திரனுக்குத் தருகின்றது என்றாலும், இந்திரன் முதலிய தெய்வங்களோடு உருத்திரனை வைத்து எண்ணவில்லை. இருக்கு வேதத்தில் ஒரு பகுதியும், கிருஷ்ண யஜுர் வேதத்தில் ஒரு பகுதியாகவே ஸ்ரீ ருத்திரமும் அவன் அழித்தல் தொழிலைச் செய்பவன் என்பதைப் பேசுகின்றன.

வேத காலத்திற்கு மிகவும் பிற்பட்ட காலத்தில், அதாவது புராண காலத்தில், மும்மூர்த்திகள் என்ற கருத்து வலுப்பெற்றுவிட்டது. ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகிய அனைவரும் மும்மூர்த்திக் கொள்கையை ஏற்றுக்கொண்டே பாடுகின்றனர்.

இப்பாடலில் அடிகளார் மும்மூர்த்திகள் யார் என்று பெயரிட்டுக் கூறவில்லை. ஆயினும், பிற இடங்களில் அவர் கூறியதை வைத்துக்கொண்டு பொருள் கொண்டால், அழித்தல் தொழிலுக்கு உருத்திரன் அதிகாரி என்று கருதநேரிடும். எந்த இடத்திலும்

இந்திரன் இப்பிரபஞ்சத்தை அழித்ததாகக் கதை ஒன்றும் இல்லை. எனவே மூவர் என்ற சொல்லுக்கு இந்திரன், நான்முகன், நாரணன் என்று பொருள் கொள்வது சரியன்று.

முதல் தெய்வங்கள் என்று சொல்லப்படும் உருத்திரன் முதலிய மூவருமே தம் தலைவனைத் தெரிந்துகொள்ளவில்லை என்றால் வேறு "யாவர் மற்று அறிவார்" என்று அடிகளார் சொல்வது பொருத்தமேயாகும்.

அடுத்துள்ள "பழங்குடில்தொறும் எழுந்தருளிய பரனே" என்பது, இந்நாட்டவரின் சமயத்தின் தனிச்சிறப்பை எடுத்துவிளக்கும் பகுதியாகும். இந்நாட்டுப் பழைய சமயங்களாகிய சைவ வைணவம் தவிர, இங்கும் வெளிநாடுகளிலும் தோன்றிய எந்தச் சமயமும், மக்கள் பொருட்டு இறைவன் கீழே இறங்கி வந்தான் என்ற கருத்தைச் சொல்லவில்லை. ஏசு சமயம்கூட இந்த உலகை உய்விப்பதற்காகப் பிதா தன் ஒரே மகனை அனுப்பினான் என்று மட்டுமே கூறுகிறது.

எல்லா உயிர்களும் மெய்ஞ்ஞானம் பெற்று அவனிடம் செல்லவேண்டு மானால் அது ஏறத்தாழ இயலாத காரியம். அவருள் ஒரு சிலர்மட்டுமே மாபெருந் தவங்கள் செய்து, எல்லையற்ற இறையன்பு பூண்டு அவனை அடையலாம்.

இதற்கு மறுதலையாக இந்நாட்டவர் கண்ட பரமகருணையுடையவனாகிய இறைவன் தன்னால் படைக்கப்பெற்ற உயிர்கள் உய்கதி அடைய வேண்டுமென்று அவை இருக்குமிடம் தேடிச் செல்கிறான். அப்படிச் செல்பவன் கருணையின் வடிவமாகிய தாயையும் உடன் அழைத்தே செல்கிறான்.

எல்லாப் பற்றுக்களையும் நீக்கி, ஏகாக்கிர சிந்தையோடு – எந்நேரமும் திருவடி நினைவோடு வாழும் – அடியார்கள் வாழும் இடம் பழங்குடிலாகத்தான் இருக்கும். காரணம் குடில் பற்றிய நினைவோ அதனைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்க வேண்டுமென்ற நினைவோ இந்த அடியார்கள் மனத்தில் தோன்றியதில்லை. எனவே அதனைப் "பழங்குடில்" என்றார்.

இதைவிடச் சிறப்பு என்னவென்றால் பிரபஞ்சத்தைப் படைத்து, அதில் தனு, கரண, புவன, போகங்களாகிய நான்கையும் படைத்து, அவை அனைத்தையும் தன்னால் படைக்கப்பெற்ற உயிர்களுக்குத் தந்துவிட்டுத் தான்மட்டும் சுடுகாட்டில் உறைபவன் அல்லவா அவன்? அப்படிப்பட்டவன் பந்தணை விரலியோடு தன் அடியார்கள் வாழும் பழங்குடிலில் சென்று தங்கிவிடுதல் புதுமை அன்று.

இவ்வாறன்றிப் பழங்குடில் என்பதற்கு அடியார்களின் "இதய கமலம்" என்றும் பொருள் கொள்ளலாம். இந்த அடியார்கள், தான் – தனது என்ற அகங்கார –

மமகாரம் அற்றவர்கள் ஆதலால், அவர்கள் பெற்ற உடலைப் பேணிக் காக்கும் வழக்கத்தை மேற்கொள்வதில்லை. எனவே, பழங்குடில் என்று அவ்வுடல்களைச் சொல்வதில் தவறு ஒன்றும் இல்லை.

அன்றி, மற்பொரு பொருளும் இதற்குக் கூறலாம். இவ்வடியார்கள் அனைவரும் வழிவழியாக எல்லையற்ற எஜமான விசுவாசத்துடன் இத்தலைவனைத் தம் இதயத்தில் நிறுவி வழிபாடு செய்தவர்கள் ஆவர். இவ்வழிபாடு தலைமுறை தலைமுறையாக நடைபெறுதலின் அதில் ஓர் அடியாரின் உடம்பைப் "பழங்குடில்" என்று கூறுவதும் பொருத்தமுடையதாகும்.

முதல் நடு இறுதி என்ற மூன்று நிலைகளை உடைய பிரபஞ்சம் கண்ணாலும் மனத்தாலும் காண்பதற்கும், கற்பனை செய்வதற்கும் உரிய ஒன்றாகும். ஆனால், இந்த மூன்றிற்கும் முற்பட்ட முந்தியதாய் நிற்கும் அல்லது அநாதியாய் நிற்கும் காலத் தத்துவத்தை மூவரும் அறிகலர் என்ற இக்கருத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். இம்மூவரும் முதல் தெய்வங்கள் எனினும், காலதத்துவத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். காலத்திற்குக் கட்டுப்பட்ட இவர்கள் காலாதீத மூர்த்தியாகிய இறைவனைக் காண்பது என்பது தருக்க ரீதியாக இயலாத காரியமாகும். அவர்களே காணமுடியாது என்றால், உலகிடைப் பிறந்து வாழும் ஏனையோர் காண்பது எங்ஙனம்?

அடியார்களுக்கு அதுவும் எளிதானது என்பதைக் குறிக்கத்தான் "பழங்குடில்தொறும் எழுந்தருளிய பரன்" என்றார். ஒரே மூர்த்தியாயினும் ஒவ்வோர் அடியாரின் இயல்பிற்கு ஏற்ப அவர்கள் வேண்டும் உருவம் கொண்டு, அவர்கள் இதய கமலங்களுள் செல்கிறான்.

அதாவது, ஒரே பரன் பல்வேறு அடியார்களின் பல்வேறு பழங்குடில்களில் எழுந்தருளும்போது ஒரே வடிவுடன் சென்றான் இல்லை. பந்தணை விரலி உடன் இருப்பது உண்மையாயினும் அவன் அடியார்கள் விருப்பத்திற்கேற்ற வடிவு கொண்டு, அவர்களின் இதய கமலங்களில் புகுகின்றான்.

இந்த அருங்கருத்தைப் பழைய திருமுருகாற்றுப்படை

"வேண்டினர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டாண்டு உறைதலும் அறிந்த ஆறே"

(திருமுருகாற்று : 248 – 9)

என்று கூறிச்செல்கிறது.

இப்படிப் பல்வேறு வேடங்களில் புகுகின்ற இவன், அடிகளாரின் பழங்குடிலில் எந்த வேடத்தில் புகுந்து எந்த "வேடத்தைக் காட்டினான் என்பதை அடிகளார் இதோ பேசுகிறார்.

முதலாவதாக, திருப்பெருந்துறையில் குருந்த மர நீழலே தான் உறைகின்ற இடம் என்று காட்டினான். அடுத்தபடியாக, தூரத்தில் இருந்து பார்த்த அடிகளாருக்குச் "செந்தழல் புரை திருமேனி" காட்டினான். இன்னும் சற்று அருகில் சென்றவுடன், அந்தண குருநாதர் வேடத்தையும் காட்டினான். ஆக, அடிகளாரை ஆட்கொள்வதற்கு முன்னர் அவரைப் பொறுத்தமட்டில் அவருடைய பழங்குடிலில் என்ன என்ன நிகழ்ந்தது என்பதைக அழகாகக் காட்டிவிட்டார்.

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரும் அவனைச் சென்று காண முயன்று காண முடியவில்லை. அப்படிப்பட்டவன் அடிகளாருக்குத் தானே வந்து காட்சி தந்ததால் அவரால் காணமுடிந்தது.

கட்டுரை உதவி :
**திரு. வே. தனபாலசிங்கம்**
( ஓய்வுநிலை அதிபர் )

பேராசிரியர் அவர்களின்
**"திருவாசகம் சில சிந்தனைகள்"**
என்ற நூலிலிருந்து



## ஈழத்துச் சித்தர் மரபில் போற்றப்படும்
# நல்லூர் சடையம்மா அவர்கள்

# சிவாச்சாரியர் கருத்து சிறியதொரு விண்ணப்பம்

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

ஓர் ஆலயத் திருவிழாவிற்குச் சென்றிருந்தேன். பெரும்பாலும் அது மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலயமாக இருக்கவேண்டும். அங்கு ஆசீர்வாதத்தின் போது குருக்கள் ஐயா "போதைப் பொருட்களின் பாவனை இல்லாதொழிய வேண்டும், இளம் சந்ததியினர் நல்வழி செல்லவேண்டும்" போன்ற பல வேண்டுதல்களை அல்லது ஆசீர்வாதங்களையும் வழமையான சுலோகங்களுடன் சேர்த்ததைக் கேட்டு மகிழ்ந்தேன்.

எம் எதிர்கால சந்ததியினர் பாவப்படுகுழிக்கு மிக வேகமாக இழுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதிலிருந்து அவர்களை மீட்டெடுக்கும் முயற்சி அவசரமாகவும் அவசியமாகவும் சகல துறையினராலும் செய்யப்படவேண்டியது என்பதை நாம் உணர்ந்தாலும் கையறுநிலையில் கலங்கி நிற்கிறோம்.

முப்போதும் இறைவனை அர்ச்சித்து வழிபடும் சிவாச்சாரியார்களுக்கு இயல்பாகவே ஒரு தெய்வீக சக்தி ஏற்படுகிறது. அவர்களது வேண்டுதல்களுக்கும் ஆசீர்வாதத்திற்கும் நிச்சயம் ஒரு தனித்துவசக்தி உள்ளது.

உபயம் செய்யும் உபயகர்த்தா மட்டுமல்ல, இந்த நாடு மட்டுமல்ல, இந்த உலகம் முழுவதும் உய்யவேண்டும் என்று பிரார்த்திக்கும் மரபு எம்முடையது.

சிவாச்சாரியார்கள் அனைவரும் ஒன்றிணைந்த ஒன்றியங்கள் இருப்பதனால் சிறியேனின் விண்ணப்பத்தை ஒன்றுகூடிப் பரிசீலித்து ஒரு முடிவிற்கு வர வாய்ப்புள்ளது.

எங்கள் நன்மைக்குத் தங்கள் ஆசீர்வாதம் அவசியம். அது எவ்வாறு அமையவேண்டுமெனத் தாங்களே தீர்மானித்து சகல ஆலயங்களிலும் நடைமுறைப்படுத்தினால் இந்த உலகம் நல்வழியில் நடக்க வழிகாட்டும் சக்தியாக அமையும்.

சில காலத்திற்கு முன் பஞ்சாட்சர மந்திரத்தை நாட்டில் நடைபெறும் தீச்செயல்கள் இல்லாது போகவேண்டுமென்ற வேண்டுதலுடன் எழுதி அர்ப்பணித்தபோது சில பயன்கள் கிட்டியதை இங்கு நினைவுகூர்தல் ஏற்றதாகும். அந்தப் பிரார்த்தனையைத் தொடராதது எம் பிழையே. அத்தகைய பிரார்த்தனைகளும் எம் மனங்களைச் செம்மைப்படுத்தும்.

எமது மனங்களிலிருந்து குரூரங்களும் கெட்டவைகளும் அகன்று அன்பும் அறமும் நிறைவேண்டுமென்றும் தீய பழக்கங்களிலிருந்து விடுபடவேண்டுமென்றும் முக்கியமாக எம் எதிர்காலச் சந்ததியினர் நல்வழி நடக்க வேண்டுமென்றும் இவை போன்ற தேவையானவற்றை இணைத்து சிவாச்சாரியார்களின் ஆசி அமையவேண்டும் என்பதே சிறியேனின் வேண்டுகோள்.

தினசரி பிரார்த்தனைகள், பஜனைகள் போன்றவற்றிலும் தமிழில் இவ்வேண்டுதலை இணைக்கவும் வழிவகை செய்யவேண்டும். இப்பிரார்த்தனைகளின் பலன் நம்மை நல்வழி நடத்தும். இது நம்மை நல்வழிப்படுத்த பல செயற்பாடுகள் உருவாக உந்துசக்தியாக அமையும்.

---

**நல்லூர் கந்தன் ஆலயப் பெருந்திருவிழா ஆரம்பம் தொடர்பாக காளாஞ்சி வழங்கும் பாரம்பரிய மரபு 06-08-2018 அன்றுநடைபெற்றது.**





# பாடும் பணியே பணியாகப் பணித்த குருநாதர் அமரர் பிரமஸ்ரீ சுந்தரமூர்த்தி ஐயா

**ஐயாவின் மாணவன் – சு. ஏழூர்நாயகம்**

1980களில் ஒரு நாள் – அன்று காசி விநாயகர் ஆலய மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமான நாள். கொடியேற்றம் நிறைவடைந்து விநாயகப் பெருமான் உள்வீதியில் நவசந்திக் கிரியைகளுடன் வலம்வருகின்றார். நவசந்திக்குரிய திருமுறைகளை அமரர் பிரமஸ்ரீ சுந்தரமூர்த்தி ஐயா அவர்கள் ஓதி வருகின்றார். அவர் என்னை அழைத்து ஒரு தாளில் எழுதப்பட்ட நவசந்திக்குரிய பண்களையும் அவற்றுக்குரிய இராகங்களையும் குறித்து என்னைப் பாடச்சொல்லிப் பணிக்கின்றார். அவர் குறித்துத் தந்த திருமுறைகள் எனக்குப் பரிச்சயமாக இருந்தமையால் தொடர்ந்து அப்பணியை நிறைவு செய்தேன். அன்று தொடங்கிய பாடும் பணி இன்று வரை காசி விநாயகர் ஆலயத்தில் மட்டுமன்றி, ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம், பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயம், மல்லாகம் பழம்பதி விநாயகர் ஆலயம் எனத் தொடர்ந்து செல்கின்றது. காசி விநாயகர் தேவஸ்தானத்தில் பிரதம சிவாச்சாரியராக விளங்கிய சிவஸ்ரீ கணேசலிங்கக் குருக்கள் அவர்கள் தாம் எழுதி வெளியிட்ட நூல் ஒன்றில் ஆலய மகோற்சவ காலங்களில் "நவசந்திப் பண்களை பாடிப்பணி செய்கிறார் சைவத்திரு ஏழூர்நாயகம்" எனக் குறிப்பிட்டு கௌரவப்படுத்தியுள்ளார். அன்றைய தினம் திருவருளாலும் சுந்தரமூர்த்தி ஐயாவின் குருவருளாலும் இவ்வாய்ப்பு கிடைக்கப்பெற்றமை நான் செய்த தவப்பயனாகுமென அறிந்து விளக்குத் திரிபோல என்னைத் தூண்டிவிட்ட அப்பெருந்தகையை நீள நினைந்து வணங்குகின்றேன். அமரர் பிரமஸ்ரீ சுந்தரமூர்த்தி ஐயா அவர்கள் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், மகாஜனக் கல்லூரியிலும் ஆசிரியப்பணி பூண்டவர். இசைக்கலையில் வயலின் வாசிப்பதில் கலைஞராக விளங்கினார். மேலும் அந்தணர் மரபில் தோன்றியமையால் ஆலய அர்ச்சகராகவும் விளங்கினார். இவரது தந்தை வழிப் பேரனார் பிரமஸ்ரீ சுந்தரமூர்த்தி ஐயா அவர்களே 117 வருட கால வரலாற்றைக் கொண்ட தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவியவர் என்ற பெருமைக்குரியவர்.

அமரர் சுந்தரமூர்த்தி ஐயா அவர்கள் 1980களின் காலப்பகுதியில் எமது குலதெய்வமான வயலிருப்பை வைரவர் ஆலயத்தின் நித்தியபூசைகளை மேற்கொண்டிருந்தார். இவ்வாலயம் பல ஆண்டுகளாகப் புனருத்தாரணம் செய்யப்படாமல் சிதைவுற்றிருந்தமையால் 1983இல் ஆலோசனைச்சபை ஒன்றைக் கூட்டி புனருத்தாரணத் திருப்பணிக்கு திருப்பணிச்சபையைத் தோற்றுவித்து திருப்பணிக் கைங்கரியத்தில் ஈடுபட வைத்தார். அவரது இக்கைங்கரியத்தால் திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஆலயம் புதுப்பொலிவுடன் 1984 தைப்பூசத் தினத்தன்று மகா கும்பாபிஷேகம் நிகழ்த்தக்கூடியதாக இருந்தது. அமரரது

பெருந்தன்மைக்கு இன்னோர் உதாரணம் – கும்பாபிடேக நிகழ்வன்று பண்ணிசை நிழக்வொன்றை ஒழுங்குபடுத்தியிருந்தோம். எதிர்பாராதவிதமாக பக்கவாத்தியக் கலைஞர் வயலின் வித்துவான் வரவில்லை. இவரை அணுகி இப்பணியை மேற்கொள்ளுமாறு கேட்டபோது எவ்வித மறுப்புமன்றி கும்பாபிடேக நாளன்று ஏற்பட்ட களைப்பையும் பொருட்படுத்தாது தனது பங்களிப்பை வழங்கினார்.

கல்விப்பணி புரிந்த ஆசிரியராக, இசைக்கலையில் வயலின் கலைஞராக, இறைவன் திருமேனி தீண்டி ஆலய அர்ச்சகராக வாழ்ந்து தம் மக்களையும் அவர்கள் தம் வாழ்வில் மேன்மையுறச் செய்து அமரராகி 25 ஆண்டுகள் நிறைவுற்ற இத்தினத்தில் அவரை நினைந்து அவர்தம் பணிகளைப் போற்றி வணங்கி அமைகின்றேன்.

**அமரர் அவர்களின் 25வது வருட நிறைவை முன்னிட்டு இக்கட்டுரை "சுந்தரர் நினைவுகள்" நினைவு மலரிலிருந்து மீள் பிரசுரம்**



**பண்ணிசை வித்துவான் வி.ரி. சுப்பிரமணியம் அவர்களின் கச்சேரியில் பிரமஸ்ரீ தி. சுந்தரமூர்த்தி ஐயா அவர்கள் வயலின் வாசிக்க அவரது மகன் பிரமஸ்ரீ வரதராஜசர்மா மிருதங்கம் வாசிக்கின்றார்.**


யாழ். பல்கலைக்கழக இந்துநாகரீகத்துறை நடாத்திய
(சுவாமி முருகேசன் அறக்கட்டளை ஆதரவில்)
சைவசித்தாந்த அறிவியல் மாகாநாடு - 2018







கதிர்காமக் கந்தன் கழலடி போற்றி



Print Master. T.P. 021-205 3322